# இலக்கு

வாராந்த மின்னிதழ்

இதழ் : 46 ○ 06.10.2019

அனைத்துலக தமிழ் ஊடக மையம்



GLOBAL TAMIL MEDIA CENTRE, USA ilakku2009@gmail.com


## கோத்தாவுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்தவருக்கு மரண அச்சுறுத்தல்



## இராணுவத்திடம் சரணடைந்த சிறுவர்கள் எங்கே?

## இலண்டனில் மாபெரும் போராட்டம்!

## இதுவரை 75 தடவைகள் இராணுவத்தின் விசாரணைகளைச் சந்தித்தேன்

சர்வதேச மனித உரிமைகள் ஆர்வலர்கள் மத்தியில் காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் இணைப்பாளர் வசந்தராணி கண்ணீர் மல்கப் பேச்சு



## சர்வதேச நீதிமன்றத்தின் ஊடாகவே நீதியைப் பெற்றுக்கொள்ள முடியும்

மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை ஞானப்பிரகாசம் இலக்கு மின்னிதழுக்கு சிறப்புப்பேட்டி

## காத்திருக்கும் ‘கண்டங்கள்’



## தாண்டுவாரா கோத்தா?

பூமிகன்

## தமிழ் பொதுவேட்பாளரை களமிறக்கும் முயற்சியில் நடந்ததும், நடக்கப்போவதும்!

சாதுரியன்

# கோத்தாவுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்தவருக்கு மரண அச்சுறுத்தல்

கோத்தாபாயவுக்கு எதிராக நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்த பேராசிரியர் சந்ரகுப்த தேனுவரவுக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் கோத்தபாய ராசபக்சவை ஆதரிக்கும் தரப்பில் இருந்தே இந்த மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. தேனுவர, இலங்கையில் நீண்டகாலமாக சமூக அரசியல் செயற்பாட்டாளராக இருந்து வருகிறார்.

இந்த வகையில் கோத்தபாயவின் இரட்டைப் பிரஜாவுரிமைப் பிரச்சினையை முன்வைத்து அவரும், செயற்பாட்டாளர் காமினி வியாங்கொடவும் மனுத்தாக்கல் செய்திருந்தனர்.

எனினும் வழக்கின் தீர்ப்பு கோத்தபாயவுக்கு சார்பாக அமைந்துவிட்டது. இதனை அடுத்து பலர் தமக்கு தொலைபேசியில் அச்சுறுத்தல் விடுத்ததாக தேனுவர குறிப்பிட்டுள்ளார். தாம் வாகனம்



செலுத்தி சென்ற வேளையில் தம்மை முந்திச் சென்ற முச்சக்கர வண்டி சாரதி ஒருவரும் மரண அச்சுறுத்தல் விடுத்த சம்பவம் இடம்பெற்றதாக தேனுவர குறிப்பிட்டுள்ளார். இந்த நிலையில் தமக்கு காவல்துறையினரின் பாதுகாப்பை அவர் கோரியுள்ளார்.

## சிறீலங்கா சனாதிபதித் தேர்தலில் 41 வேட்பாளர்கள் கட்டுப்பணம்

சிறீலங்கா அதிபர் தேர்தலில் போட்டியிடுவதற்கு 41 வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர் என்று தேர்தல்கள் ஆணைக்குழு தகவல் வெளியிட்டுள்ளது. நவம்பர் 16ஆம் நாள் நடக்கவுள்ள அதிபர் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் இன்று நண்பகல் 12 மணியுடன் முடிவடைந்தது.

ஏற்கனவே 33 வேட்பாளர்கள் சார்பில் கட்டுப்பணம் செலுத்தப்பட்டிருந்த நிலையில், இன்று மேலும் 14 வேட்பாளர்கள் சார்பில் கட்டுப்பணம் செலுத்தப்பட்டது. இதையடுத்து, கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை 41 ஆக அதிகரித்துள்ளது.

நாளை காலை 9 மணி தொடக்கம் 11 மணிவரை வேட்புமனுத் தாக்கல் இடம்பெறவுள்ளது. சிறீலங்கா அதிபர் தேர்தல் வரலாற்றில் மிக அதிகபட்ச வேட்பாளர்கள் போட்டியிடும் தேர்தலாக இது அமையவுள்ளது.

# நாம் பல பிரிவுகளாகப் பிளவுபட்டுள்ளதால் பேரம்பேசும் சக்தியை இழந்துள்ளோம்.

சனாதிபதித் தேர்தலில் தமிழ் தேசிய பாதையில் பயணிக்கும் கட்சிகள் ஒருமித்த நிலைப்பாடு ஒன்றை எடுக்கக் கொள்கை அளவில் இணக்கம் தெரிவித்துள்ளமையும் ஆரோக்கியமான ஒன்றே ஆகும் என்று யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வரவேற்றுள்ளது. இது தொடர்பில் மாணவர் ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:—

தமிழ் மக்கள் நீண்ட காலமாகப் போராடிக் கொண்டிருப்பது தமக்கான நிரந்தரமான அரசியல் தீர்வொன்றைப் பெற்றுக் கொள்வதற்காகவே, இதுவரையில் பலவழிகளிலும் போராடிக் கொண்டிருக்கும்

### யாழ்.பல்கலை மாணவர் ஒன்றியம் அறிக்கை

நிலையில் நாம் இன்று பல தரப்புக்களாக எம்முள் பிளவுபட்டு நின்கின்றோம். இதனால் நாம் எமது பேரம்பேசும் பலத்தை இழந்து விடும் துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். எமது பேரம் பேசும் பலத்தைப் உறுதிப்படுத்த நாம் ஒருமித்த முடிவினை எடுக்க வேண்டியது என்பது காலத்தின் கட்டாய தேவையாகும்.

இத்தகைய சூழலைத் தமிழ்தரப்புக்கள் அனைத்தும் உணர்ந்து கொண்டு பிளவுபட்டு நின்ற கட்சிகள் அனைத்தும் ஒன்றாக கூடி கலந்துரையாடியமையும் ஆரோக்கியமாக கலந்துரையாடல்கள் இடம்பெற்று எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் தமிழ் தேசியபாதையில் பயணிக்கும் கட்சிகள் ஒருமித்த நிலைப்பாடு ஒன்றை எடுக்க கொள்கை அளவில் இணக்கம் தெரிவித்துள்ளமையும் ஆரோக்கியமான ஒன்றே ஆகும். அதுமாத்திரமின்றி தமிழ்க் கட்சிகள் சார்பில் தலா இரண்டுபேர் கொண்டதாக குழு ஒன்றினை இன்றைய கலந்துரையாடலில் நியமித்துள்ளோம். அதனடிப்படையில் தொடர்ந்து நாளை மறுதினம் திங்கட்கிழமை அன்று

தொடர்ச்சி 8ம் பக்கம்..

# சஜித்தின் பகிரங்க அறிவிப்பால் நெருக்கடியில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு

### அணுகுமுறை தவறால் அம்பலமானது கையாலாகாததனம்



எதிர்வரும் சனாதிபதி தேர்தலில் சனநாயக தேசிய முன்னணியின் சனாதிபதி வேட்பாளராக ஐக்கிய தேசியக் கட்சியின் உப தலைவர் அமைச்சர் சஜித் பிரேமதாஸ களமிறங்கியுள்ளார்.

அவர் தற்போது மக்கள் பேரணிகளிலும், அரசியல் மேடைகளிலும் தனது நிலைப்பாடுகளை பகிரங்கமாக கூறிவருகின்றார். குறிப்பாக, எவருடைய நிபந்தனைகளுக்கும் அடிபணியப் போவதில்லை என்றும் பிரிக்கப் படாத நாட்டினுள் ஒற்றையாட்சிக் கட்டமைப்பிற்குள் 13ஆவது திருத்தச் சட்டத்தினையே இனப் பிரச்சினைக்கான தீர்வாக முன்வைக்கவுள்ளதாகவும் கூறுகின்றார். அத்துடன் எந்தவொரு அரசியல் தரப்புக்களுடனும் எழுத்து மூலமான ஒப்பந்தங்களை செய்யப் போவதில்லை என்றும், 25 மாவட்டங்களிலும் பாரிய பௌத்த சிலைகளையும், திரிபீடகங்களையும், நிறுவப்போவதாகவும் இராணுவத்தினர் மீது ஒரு குண்டூசி படுவதற்கே இடமளிக்கமாட்டேன் என்றும் பகிரங்கமாக கூறியுள்ளார்.

மேலும், தமிழ் மக்கள் அடிப்படை விடயங்களையும், அபிவிருத்திகளையும், வேலை வாய்ப்புக்களையுமே எதிர்பார்த்திருப்பதாகவும் அரசியல் தலைவர்களே வாக்குகளைப் பெறுவதற்காக அதிகாரப் பகிர்வு பற்றி பேசுவதாகவும் தனக்கு நெருங்கியவர்களிடத்திலும் கூறியுள்ளார். அதேநேரம், கூட்டமைப்பினரை இரண்டு மூன்று தடவைகள் தனக்கு ஆதரவளிக்குமாறு கோரியபோதும் அவர்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை முன்னிலைப் படுத்தி நழுவல் போக்கினை கடைப்பிடித்து வந்திருந்த நிலையில் தற்போது வேட்பாளராக அறிவிக்கப்பட்ட நிலையில் அவர்களின் நிபந்தனைகளை எனக்கு ஏற்க வேண்டிய அவசியம் இருகின்றதா என்று சிந்திப்பதாகவும் தொடர்ச்சி 08ம் பக்கம்..

## சனாதிபதித் தேர்தலில் சிவாஜிலிங்கம்



சனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கான கட்டுப்பணத்தை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், ரெலோ அமைப்பின் சிரேஸ்ட தலைவருமான எம்.கே.சிவாஜிலிங்கம் செலுத்தியுள்ளார். இன்று நண்பகல் கொழும்பில் உள்ள தேர்தல்கள் செயலகத்தில் சிவாஜிலிங்கம் சார்பில் முன்னாள் மாகாணசபை உறுப்பினர் அனந்தி சசிதரனால் கட்டுப்பணம் செலுத்தப்பட்டது.

சுயேட்சையாகப் போட்டியிடுவதற்காக, ரெலோ தவிசாளர் பதவியைவிட்டு விலகுவதாக கட்சிக்கு எழுத்து மூலம்

தொடர்ச்சி 08ம் பக்கம்..

## ஓய்வுபெற்ற இராணுவத் தளபதி தேர்தலில் நிற்பதால் அச்சத்தில் படையினர்



சனாதிபதி வேட்பாளராக முன்னாள் இராணுவத்தளபதி மகேஸ் சேனாநாயக்க களமிறங்கியயுள்ள நிலையில் அவரது அரசியல் பிரவேசத்தினால் படையினரும் அவரின் உறவினர்களும் அச்சமடைந்துள்ளனர்.

குறிப்பாக 2010ஆம் ஆண்டு சனாதிபதி தேர்தலில் முன்னாள் இராணுவத்தளபதியாக இருந்த பீல்ட் மார்சல் சரத்பொன்சேகா பொதுவேட்பாளராக களமிறக்கப் பட்டிருந்த போதும் அவர் தோல்வியை தழுவியிருந்தார்.

இந்நிலையில் இம்முறையும் மற்றுமொரு இராணுவத் தளபதியான மகேஸ் சேனாநாயக்கவும் தோல்வியை தழுவுகின்றபோது இராணுவத்தினருக்கான அபிமானம் முழுமையாக மக்கள் மத்தியிலிருந்து அகற்றப்படும் அபாயம் ஏற்பட்டுவிடும். இதன் காரணமாகவே படையினரும், அவர்களது உறவினர்களும் அச்சமடைந்துள்ளதாகவும், அவரை தேர்தல் களத்திலிருந்து இறுதித்தருணத்திலாவது விலகச் செய்வதற்கான முயற்சிகளை முன்னெடுத்து வருவதாகவும் அறிய முடிகின்றது.

## மூன்றாக பிளவுபடும் நிலையில் சிறீலங்கா சுதந்திரக் கட்சி?

அதிபர் தேர்தலில் பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் கோத்தாபய ராஜபக்சவுக்கு, சிறீலங்கா சுதந்திரக் கட்சி நிபந்தனையற்ற ஆதரவு வழங்க முடிவு செய்திருப்பதை அடுத்து, கட்சி மூன்றாக பிளவுபடும் நிலை ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்றிரவு சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் மாவட்ட மற்றும் தொகுதி அமைப்பாளர்களிடம் அதிபர் தேர்தல் தொடர்பாக வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

அதில், பொதுஜன பெரமுனவுக்கு ஆதரவு அளிப்பதற்கு பலர் ஆதரவளித்த போதும், இன்னும் பலர் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். இந்த நிலையில், பொதுஜன பெரமுன வேட்பாளர் கோத்தாபய ராஜபக்சவுக்கு நிபந்தனை அற்ற ஆதரவு அளிப்பதாக சிறீலங்கா அதிபர் நேற்றிரவு மகிந்த ராஜபக்சவுக்கு தெரியப்படுத்தினார்.




எனினும், இதற்கு சுதந்திரக் கட்சியின் ஒரு பகுதியினர் எதிர்ப்பு வெளியிட்டு வருகின்றனர். எதிர்ப்பு வெளியிட்டுள்ள அணியினரில் ஒரு பகுதியினர் சுதந்திரக் கட்சியைப் பாதுகாக்கும் இயக்கம் என்ற பெயரில் இயங்கவுள்ளனர். அவர்களின் சார்பில் குமார வெல்கம அதிபர் தேர்தலில் போட்டியிடவுள்ளார்.

மற்றொரு அணியினர், சுதந்திரக் கட்சியில் இருந்து கொண்டே, ஐக்கிய தேசிய கட்சி வேட்பாளர் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு அளிக்கவுள்ளனர் அல்லது ஐ.தே.கட்சிக்கு தாவ முடிவு செய்துள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. இதனால் சிறீலங்கா சுதந்திரக் கட்சி மூன்றாக உடையும் நிலை ஏற்பட்டுள்ளதாக கொழும்பு தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும், கட்சி பிளவுபடும் வாய்ப்பு இல்லை என்று சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லசந்த அழகியவன்ன தெரிவித்தார்.

# பொது வேட்பாளர்?

சனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவரை களமிறக்குவதற்காக தமிழ் சிவில் சமூகத்தினர் மேற்கொண்ட முயற்சி தோல்வியடைந்துள்ளது. தமிழ் மக்கள் பேரவையின் சார்பில் மதத் தலைவர்கள் புத்தி ஜீவிகள் கருத்துருவாக்கிகளை உள்ளடக்கிய சுயாதீன குழு ஒன்று கடந்த இரு வாரமாக இந்த முயற்சியை தீவிரமாக முன்னெடுத்து தோல்வியால் விரக்தியடைந்துள்ளது. சனாதிபதி தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் நாளை தாக்கல் செய்யப்படவுள்ளன. 30 வரையிலானவர்கள் களமிறங்குகின்றார்கள். தமிழர்கள் யாருக்கு வாக்களிப்பது என்ற கேள்வி எழுப்பப்படுகிறது. யாருக்கு வாக்களித்தும் எதுவும் நடக்கப் போவதில்லை என்றாலும், தேர்தலின் முடிவு தமிழர் தாயகத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியது. அதனால், ஏதோ ஒரு முடிவுக்கு வரவேண்டியது அவசியம். இதனை இராஜதந்திரமாகப் பயன்படுத்தலாமா என்பதும் கவனிக்கப்பட வேண்டியது.

இரண்டு பிரதான வேட்பாளர்கள், ஜே.வி.பியின் சார்பில் போட்டியிடும் மூன்றாவது வேட்பாளர் என இந்த மூன்று வேட்பாளர்களும்தான் முக்கியமானவர்கள். இதில் யாராவது ஒருவருக்கு வாக்களிப்பதா? என்ன அடிப்படையில் வாக்களிப்பது? என்ற கேள்விகள்தான் தமிழ் மக்களிடம் எழுகிறது. கடந்த காலங்களிலும் வாக்குறுதிகளை நம்பி, அல்லது மற்றொருவரைத் தோல்வியடையச் செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் வாக்களித்தோம். இந்த மூன்று வேட்பாளர்களும் தமிழர்களின் வாக்குகளை நாடி வருகின்றபோதிலும், பிரச்சினைகளுக்கான தீர்வு குறித்து தாம் என்ன செய்யப் போகின்றோம் என்பதை எழுத்து மூலம் வெளிப்படையாக சொல்வதற்கு தயாராகவில்லை. தமிழ் மக்களுடைய பிரதிநிதிகள் என சொல்லப்படுபவர்களுடன் இரகசிய பேச்சுக்களை நடத்தி சில வாக்குறுதிகளை வழங்குவதற்கு மட்டுமே அவர்கள் தயாராக இருப்பதாக தெரிகின்றது.

தமிழர்களுக்கு தருவதாக வடக்கில் சொல்வதை, தெற்கில் சென்று சிங்களவர்களிடம் சொல்வதற்கு அவர்கள் தயாரில்லை.. அது சிங்கள வாக்குகளை பாதிக்கும் என்ற அச்சம் அவர்களுக்கு. சுயாதீன குழு முன்னெடுத்த முயற்சிக்கு இதுதான் காரணம். சிங்கள கட்சிகளிடம் குழு செல்லவில்லை. தமிழ் கட்சிகளிடமே சென்றார்கள். எழுத்து மூலமான வாக்குறுதிகளை பெற்றுக்கொள்ள வேண்டும் என்பது அவர்களின் முதல் கோரிக்கை. அதற்கு நியாயமான காரணங்கள் உள்ளன. எழுத்து மூலமான வாக்குறுதிகள் கூட கிழிக்கப்பட்ட வரலாறு இருப்பதால், உத்தரவாதத்தையும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதும் அவர்களுடைய நிலைப்பாடு.

சிங்களக் கட்சிகள் எதுவுமே இதற்கு இணங்கி வரப்போவதில்லை என்பது தெரிந்த நிலைமையில்தான் தமது இரண்டாவது கோரிக்கையை முன்வைத்தார். அதாவது தமிழ் மக்களின் அபிலாஷைகளை முன்னிலைப்படுத்தும் வகையில் தமிழ் வேட்பாளர் ஒருவரை தேர்தல் களத்தில் இறக்குவது என்பதுதான் அந்தக் கோரிக்கை. அதற்கு வலுச்சேர்க்கும் காரணங்களும் அவர்களால் முன்வைக்கப்பட்டது. தமிழ் மக்களின் நிலைப்பாடு இதுதான் என்பதை சர்வதேச சமூகத்தின் முன்பாக தெளிவாக வெளிப்படுத்துவதற்கும், தமிழ் மக்களுடைய பேரம்பேசும் பலத்தை அதிகரித்துக் கொள்வதற்கும் இவ்வாறு பொது வேட்பாளர் ஒருவர் களத்தில் இறக்குவது அவசியம் என்பது அவர்களுடைய கருத்து. இது தமிழத் தரப்பின் அரசியல் பலத்தை அதிகரித்துக்கொள்வதற்கான ஒரு உபாயம் என்பதில் சந்தேகமில்லை.

சனாதிபதி தேர்தல் ஒன்று இவ்வருட இறுதிக்குள் வரும் என்பது ஏற்கனவே தெரிந்திருந்தது. இரண்டு வருடங்களுக்கு முன்னரே சிங்களக் கட்சிகள் அதற்கான தயார்படுத்தல்களை ஆரம்பித்திருந்தன. ஆனால் தமிழ் அரசியல் பரப்பில் அதற்கான ஆயத்தங்கள் எதுவுமே இருக்கவில்லை. திட்டமிடல் இருக்கவில்லை. அந்த இலக்கில் தமிழ் அரசியல் கட்சிகளை ஒன்றுபடுத்த முற்படவில்லை. பொது வேட்பாளர் எனக் கூறினாலும் அதற்குரிய ஆளுமை, வசீகரத் தன்மை கொண்ட ஒருவரை கொண்டு வந்து நிறுத்துவது முக்கியமானது. அதுவும் செய்யப்படவில்லை.

பொது வேட்பாளர் என்ற கோசம் கலைந்து போவதற்கு தமிழ் தரப்பின் திட்டமிடாத செயற்பாடு தான் காரணம். அதனை முன்னெடுக்கக்கூடிய பலம்வாய்ந் சிவில் சமூகம் ஒன்றும் எம்மிடம் இல்லை. பொதுவான பிரச்சனைகளின் போது ஒன்றுபட்டு செயற்படக்கூடிய அமைப்புமுறை ஒன்று எம்மிடம் இல்லை. அதற்கான தலைமை ஒன்று இல்லை. பொது வேட்பாளர் என்ற கருத்து காலத்துக்கேற்ற இராஜதந்திர நகர்வாக இருந்தாலும், அதனைப் பிரபலப்படுத்துவதற்கான செயன்முறைகளின் போதாமைதான் அதன் தோல்விக்குக் காரணம்.

**- ஆசிரியர்**

# இதுவரை 75 தடவைகள் இராணுவத்தின் விசாரணைகளைச் சந்தித்தேன்

அயர்லாந்து நாட்டின் டப்ளின் நகரில் ஒக்டோபர் 2ஆம் திகதி துவங்கி 4ஆம் திகதி வரை, முன்னணி காப்பாளர்கள் (Frontline Defenders - The international foundation for the protection of Human Rights Defenders) எனும் சர்வதேச மனித உரிமை போராளிகளை பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்ட தளத்தின் மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டில் உலகம் முழுவதிலிருந்து மனித உரிமை நிறுவனங்களும், செயல்பாட்டாளர்களும், பாதிக்கப்பட்டவர்களும் கலந்து கொண்டனர்.

ஈழத்திலிருந்து அம்பாறை மாவட்டத்தின் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான போராட்டத்தின் செயலாளரான தம்பிராசா செல்வராணி கலந்துகொண்டார். மே17, 2009 அன்று சிறீலங்கா இராணுவத்தினரிடம் சரணடையக் கொடுத்த தனது கணவர்




காணாமல் ஆக்கப்பட்டது குறித்தும், சிறீலங்கா இராணுவத்தினால் ஏராளமான தமிழ் உறவுகளும் எப்படியெல்லாம் காணாமல் ஆக்கப்பட்டார்கள் என்றும், சிறீலங்கா அரசு மேற்கொண்டு வரும் இனப்படுகொலை குறித்தும் செல்வராணி அவர்கள் கண்ணீர் மல்க உரையாற்றினார். அவரின் உரை வருமாறு...

### அனைவருக்கும் வணக்கம்

இக்கூட்டத்தில் பேசுவதற்கும், அனுபவங்களை பகிர்வதற்கும் அளிக்கப்பட்ட வாய்ப்பிற்கு நன்றி. நான் இங்கு ஒரு மனித உரிமை ஆர்வலராக மாத்திரம் வரவில்லை, வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் குடும்பத்திலிருந்து நேரடியாக பாதிக்கப்பட்ட ஒரு பெண்ணாகவும் வந்திருக்கிறேன். எனது பெயர் தம்பிராசா செல்வராணி, நான் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களுக்கான அமைப்பின் கிழக்கு மாகாண அம்பாறை மாவட்ட செயலாளராக சேவையாற்றுகிறேன். அத்துடன் இறுதி கட்ட போரின் போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட முத்துலிங்கம் ஞானசெல்வம் என்பவரின் மனைவியும் ஆவேன். எனது கணவர் ஓமந்தை சோதனை சாவடியில் சோதனை செய்யப்பட்ட பின்னர் கைது செய்யப்பட்டு தடுப்பில் வைக்கப்பட்டார். மே 17, 2009 அன்று அவர் இலங்கை இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டபோதிலும் அவரது பெயர் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் பெயர் பட்டியலில் இன்னமும் காணப்படுகின்றது. எனது கணவர் வலிந்து காணமாற் போய் பத்து வருடங்களுக்குமேல் ஆகிவிட்ட நிலையில் என் தேடல் தொடர்கின்றது.

நான் போரின் போது வட மாகாணத்திலும், போருக்கு பின்னர் கிழக்கு மாகாணத்திலும் வாழ்ந்து வந்தேன். இவ்விரு மாகாணங்களும் தமிழ் மக்களின் தாயகமாக இருந்து வந்துள்ளன. இந் நிலமானது கடந்த 40 வருடங்களாக இலங்கை இராணுவத்தின் ஆக்கிரமிப்பின் கீழ் இருந்து வருகின்றது. இலங்கை இராணுவ ஆக்கிரமிப்பானது பல்லாயிரக்கணக்கிலான இறப்புக்களையும், காணாமல் போதல், தன்னிச்சையான கைதுகள் மற்றும் சட்டவிரோத தடுப்புக்காவல்கள், பாலியல் பலாத்காரம் மற்றும் சித்திரவதை, உள்நாட்டு இடப்பெயர்வுகள், பொருளாதார சவால்கள் மேலும் பல நேரடியான மற்றும் மறைமுகமான தாக்கங்களை விளைவித்துள்ளது. முள்ளிவாய்க்காலில் தமிழ் மக்களுக்கெதிராக நேர்ந்த கொடூரமான நிகழ்வுகளின் நேரடி சாட்சியாக நான் வாழ்ந்து வருகிறேன். இச்சம்பவங்கள் யாவும் ஒன்றையே வலியுறுத்துகின்றன, அதாவது இவ்வாறான இராணுவ நடவடிக்கைகள் இனப்படுகொலை நோக்கம் கொண்டவை.

**சர்வதேச மனித உரிமைகள் ஆர்வலர்கள் மத்தியில் அம்பாறை மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் இணைப்பாளர் வசந்தராணி கண்ணீர் மல்கப் பேச்சு**

ஐக்கிய நாடுகள் சபையின் சுயாதீன நிபுணர் சார்ல்ஸ் பியேட்றி தனது அறிக்கையில் மே மாதம் 2009இல் 70,000திற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் கொல்லப்பட்டதாக கூறியுள்ளார். ஆனால் உண்மையான எண்ணிக்கை 1,46,000ற்கும் மேற்பட்டது. இவர்கள் டிசம்பர் 2008ற்கும் மே 2009ற்குமிடையே கொல்லப்பட்டுள்ளனர். அக்கட்டத்தில் ஐக்கிய நாடுகள் சபை ஊழியர்களும் இப்பகுதியைவிட்டு வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டனர். ஐக்கிய நாடுகள் சபையும், அதன் பொறிமுறைகளும் இவ்வாறான அவலங்களிலிருந்து தமிழ் மக்களை பாதுகாக்க தவறியமை கவலைக்கூறிய விடயமாகும். இலங்கை இராணுவப் படையினர் இரசாயன ஆயுதங்கள், கொத்துக் குண்டுகள் அனுமதிக்கப்படாத ஆயுதங்களை போரின் இறுதி கட்டத்தில் பிரயோகித்ததன் காரணத்தினால் பெருந்தொகையிலான உயிரிழப்புக்களை மக்கள் மத்தியில் சந்திக்க நேர்ந்தது. இதை நாம் இனப்படுகொலை என்றே கருதுகின்றோம்.

1980களில் ஆரம்பித்து மே 2009 வரை தொடர்ந்த உள்நாட்டு யுத்தத்தை தமிழ் மக்களாகிய நாம் எங்களது சுதந்திரத்துக்கான போராட்டமாகவே கருதுகின்றோம். இப்போராட்டமானது பல்வேறு வடிவங்களில் இராணுவத்தினால் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் மூலமாக மேலும் தமிழ் மக்களை அடக்கியொடுக்கி மௌனித்தது. பல்லாயிரக்கணக்கான மக்கள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமையும் மேற்கூறிய மீறல்களில் ஒன்றாகும். உண்மைக்கும் நீதிக்கும் குரல் கொடுக்கும் பாதிக்கப்பட்ட குடும்ப உறுப்பினர்களில் நானும் ஒருத்தி. போரின் இறுதிகட்டதில் தங்களது கணவர்களையும், பிள்ளைகளையும் இராணுவத்திடம் ஒப்படைத்து தடுப்பு முகாம்களில் வைக்கபட்டு பின்னர் காணாமல் ஆக்கப்பட்டவர்களின்



80,000 மனைவிமாரும், தாய்மாரும், இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அண்மையில் காணாமல் ஆக்கப் பட்டவர்களின் உறவினர்களுக்கு எதிராக இடம்பெற்ற அச்சுறத்தல்கள் மற்றும் தாக்குதல்கள் போன்ற சம்பவங்களை. சுட்டிக்காட்ட விரும்புகிறேன். காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனுக்காக தாயொருவர் போராட்டங்களில் அர்ப்பணிப்புடன் கலந்து உண்மையைக் கண்டறிவதற்கு குரல் கொடுத்து ஊக்கமாக செயல்ப்பட்டதன் காரணமாக தாக்கப்பட்டார். ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் அமர்வில் பங்கெடுத்ததன் காரணமாக இலங்கை திரும்பிய பின்னர் ஒரு நாள் தனது சைக்கிளில் செல்லும் பொழுது அவர் மீது இரும்புக்



கம்பி ஒன்று வீசப்பட்டது. கடந்த மூன்று ஆண்டுகளாக நடைபெற்ற போராட்டங்களில் கலந்துகொண்ட 56 தாய்மார்கள் நோய்வாய்ப்பட்டு உயிரிழந்துள்ளனர். அவர்களின் கதைகளும், சாட்சியங்களும் ஆவணப்படுத்தப்பட்டு பாதுகாத்து பகிரப்பட வேண்டும். நான் தனிப்பட்ட ரீதியில் இனந் தெரியாத நபர்களினால் பல தடவைகள் தாக்கப்பட்டிருக்கிறேன். அண்மையில் நான் இராணுவ புலனாய்வு பிரிவினால் விசாரிக்கப்பட்டேன். ஜெனீவாவில் 42ஆவது ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் கலந்து கொள்வதற்காக செல்ல முன்னரும் பயங்கரவாத விசாரணைப் பிரிவினால் விசாரணைக்கு அழைக்கப்பட்டேன். கைது செய்யப்படும் அபாயம் மற்றும் மிரட்டல்கள், தாக்குதல்கள் காணப்பட்ட பொழுதிலும் என்னுடைய போராட்டம் தொடர்கின்றது.

எனது கணவரைத் தேடும் இம்முயற்சியில் இருக்கும் நான் தொடர்ந்து இராணுவத்தின் கண்காணிப்பின் கீழ் வாழ்ந்து வருகிறேன். அவர்கள் தொடர்ந்து என் மகனையும், என்னையும் தொந்தரவு செய்து வருகின்றனர். கடந்த 10 வருடங்களில் நான் இலங்கை பாதுகாப்பு படையினரால் சுமார் 75 தடவைகள் விசாரிக்கப்பட்டிருக்கிறேன். வலிந்து காணமல் ஆக்கப்பட்டோர் தொடர்பிலான நிகழ்வுகளுக்குச் செல்லும் வேளைகளிலும், இராணுவ புலனாய்வு என்னை பின் தொடர்வதுண்டு. நிலைமாறுகால நீதி பொறிமுறைகளின் ஓர் சாதனையாகவே காணாமால் போனோருக்கான அலுவலகத்தை இலங்கை அரசு பயன்படுத்துகின்றது. ஆனால் இவ்வலுவலகத்தினால் எவ்விதமான முன்னேற்றமும் தென்படவில்லை.

சர்வதேச சமூகத்தை ஏமாற்றுவதற்கே காணாமால் போனோருக்கான அலுவலகம் திறக்கப்பட்டது. வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள எட்டு மாவட்டங்களின் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களுக்கான அமைப்பின் உறுப்பினர்கள் ஒன்றிணைந்து கிளிநொச்சியில் ஓர் மாபெரும் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருக்கின்றனர். அது விரைவில் 1000 நாட்களை கடந்துவிடும்.

எனது அன்பார்ந்த சகாக்களே, இந்த ஆர்ப்பாட்டம் தமிழ் மக்களின் ஒருமித்த கோரிக்கையை தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. அதாவது தொடர்ந்து ஆட்சியமைக்கும் இலங்கை அரசாங்கங்கள் உண்மைக்கும் நீதிக்குமான எமது அழைப்பை புறக்கணித்து வருகின்ற காரணத்தினால் மேலும் இலங்கை அரசுக்கு கால அவகாசம் கொடுப்பது அர்த்தமற்றது. மேலும் உள்நாட்டு நீதிக்கான பொறிமுறைகள் பல சகாப்த காலமாக தமிழருக்கு சார்பான தீர்வை ஒருப்போதும் பெற்றுத்தரவில்லை.. எனவே, சர்வதேச சமூகத்திடம், சர்வதேச விசாரணைக்கு ஆதரவளிக்க அழைப்பு விடுக்குமாறும், தமிழ் மக்களுக்கு நீதி மற்றும் பொறுப்பு கூறலை உறுதிப்படுத்தும் ஓர் சர்வதேச நீதிமன்றத்தை அணுகும் வழிமுறைகளைக் கண்டறியவும், பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் சார்பில் இங்கு சமூகமளித்திருக்கும் அனைவரிடமும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். நன்றி.

# சர்வதேச நீதிமன்றத்தின் ஊடாகவே நீதியைப் பெற்றுக்கொள்ள முடியும்

## மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை ஞானப்பிரகாசம் நேர்காணல்

இலங்கை அரசை நம்புவதால் பயனில்லை. அவர்கள் ஒருபோதும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதியை பெற்றுத்தரமாட்டார்கள். எனவே அனைத்து மக்களும், அனைத்து மனித உரிமை அமைப்புக்ளையும், சமூக நலன் கருதி நீதிக்காக செயல்படுகின்ற அமைப்புக்களை ஒன்றிணைத்து இதுவரை நடைபெற்ற ஒவ்வொரு செயல்பாடுகளும் ஒரு பாரிய இன அழிப்பு என்பதை வெளிப்படுத்த வேண்டும். இந்த விடயங்கள் சர்வதேசத்திற்கு தெரிந்தாலும் அவர்களுக்கு அழுத்தம் கொடுத்து சர்வதேச நீதிமன்றத்தின் ஊடாகத்தான் நீதியை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்று மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை ஞானபிரகாரம் அவர்கள் எமக்கு இணைய இதழுக்கு வழங்கிய சிறப்பு நேர்காணலில் தெரிவித்தார். அவருடைய நேர்காணலின் முதற்பகுதி வருமாறு,

**கேள்வி:- மன்னார் பிரஜைகள் குழு எத்தகைய செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது ?**

பதில்:— மன்னார் மாவட்டத்தில் வாழ்கின்ற பிரசைகளின் அடிப்படை உரிமைகள் மீறப்படுகின்ற போதும் அல்லது மறுக்கப்படுகின்ற போது அப்பிரச்சினைகளை சரியான முறையில் இனங்கண்டு அதை உரிய இடங்களுக்கு அணுகி சரியான தீர்வை அதாவது நீதியான தீர்வை பெற்றுக்கொடுத்தல். சமூகத்தில் ஏற்படுகின்ற சீர்கேடுகளை உரிய முறையில் அணுகி ஒரு நல்ல ஒழுக்கமான சமூகத்தை உருவாக்குதல், அடிப்படை மனித உரிமைகள், பால் உள்ள உரிமைகள், கடமைகள், மனித நேயம், மனிதப் பண்பு போன்றவற்றை கடைப்பிடிப்பதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்தல் உள்ளிட்ட செயற்பாடுகளை தொடர்ந்து முன்னெடுக்கின்றோம்.

**கேள்வி:- மன்னாரில் உள்ள மக்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகள் அல்லது சவால்கள் எத்தகையதாக இருக்கின்றது ?**

பதில்:— மன்னாரில் வாழ்கின்ற மக்கள் பல பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றனர். குறிப்பாக, சமூகப் பிரச்சினை, சமயப் பிரச்சினை, அபிவிருத்தி தொடர்பான பிரச்சினை வேலைவாய்ப்பு, அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் நியமனங்கள் தொடர்பான பிரச்சினைகள், அரச உத்தியோகத்தர்களின் பக்கச் சார்பான பிரச்சினைகள், காணி தொடர்பான பிரச்சிசனைகள், காவல் துறையினரின் பக்கச் சார்பான பிரச்சினைகள், மது ஒளிப்பு தொடர்பான பிரச்சனைகள், காவல் துறையினர் இதைக் கண்டும் காணாததுபோல் செயற்படுவதும் சாதாரண வியாபாரிகள் தண்டிக் கப்படுவது மிகவும் வேதனைக் குரியவையாகும். கஞ்சா, சட்டவிரோத செயற்பாடுகள் செய்பவர்கள் ஒரு முதலாளியாக இருப்பார். ஆனால் நீதிமன்றத்திற்கு அனுப்பப்படுபவர் முதலாளி தான் தன்னை தப்பிக்கவைக்கும் பொருட்டு ஒரு சாதாரண ஒருவரை காசுக்காக அனுப்பிவிட்டுதான் தப்பித்துக் கொள்வார்.



மன்னார் மாவட்டத்தில் பிற மாவட்டத்தில் உள்ளவர்கள் அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி அவர்களினூடாகத் மக்கள் தூண்டிவிடப்பட்டு பாரிய மதப் பிரச்சினைகளை உருவாக்குகின்றார்கள். அரசியல் வாதிகள் அரசியலை சமூக நலனுக்காக முன்னெடுக்க வேண்டும். இதனை விடுத்து அரசியல் இலாபத்திற்காக பிற மாவட்டங்களைத் தூண்டிவிட்டு குழப்பத்தை ஏற்படுத்துகின்றார்கள்.

**கேள்வி:- நாட்டில் நல்லிணக்கம் பற்றிய கலந்துரையாடல்கள் இடம் பெறுகின்றபோதும் அது நடைமுறைச் சாத்தியமாகுமா ?**

பதில்:— நடைபெற்று வருகின்றன. உண்மை. ஆனால் ஒவ்வொருவரும் நல்லிணக்கம் என்று கூறி தங்களது சுய லாபத்திற்காகவும் சுய அரசியலுக்காகவும் இதய சுத்தம் இல்லாமல் பொதுநலன் கருதாமல், மனித மாண்பு மதிக்கப்படாமல் முன்னெடுப்பதுடன் முக்கியமாக பொறுப்பாக இருக்கின்ற இலங்கை அரசும் அதில் அங்கத்துவம் வகிக்கின்ற மாண்புமிகு சனாதிபதி உட்பட இதய சுத்தத்துடன் செயற்படாமையும் பேரினவாதத்திற்கு முன்னுரிமைப்படுத்தி நீதித் தீர்ப்புக்கள், அதனோடு தொடர்புடைய செயற்பாடுகள் முரண்பட்டுக் காணப்படுவதனால் நல்லிணக்க கலந்துரையாடல்கள் நடை முறையில் சாத்தியமற்றதாக காணப் படுகின்றது. சிங்கம், ஆடு நட்புறவு ஆகுமா? கடவுளே தீர்வு. மேற்கூறிய விடயங்களைக் களைந்து மக்கள் தங்களது எண்ணங்களை மாற்றினாலும் அரசு இதய சுத்தத்துடன் சமத்துவமாக செயல்படும்போதுதான் இது சாத்தியமாகும்.

**கேள்வி:- வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் உட்பட வடக்குக் கிழக்கில் தமிழ் மக்கள் தொடர்ச்சியாக போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றபோதும் அரசாங்கம் அதற்கு எந்தவிதமான தீர்வுகளை வழங்காது பாராமுகமாக இருப்பது ஏன் ?**

பதில்:— இலங்கை அரசானது தமிழ் மக்களின் பிரச்சினைகளை நன்கு அறிந்ததே. ஆனால் இப்பிரச்சினைக்கு காரணம் உண்மையில் அரச தலைவர்களும் அத்துடன் முக்கியமான இராணுவத் தலைவர்களும், பல நாடுகளும் இதற்கு தொடர்புடையவர்கள். இதை வெளிப்படுத்தினால் மக்கள் பயப்படத்தேவையில்லை, உண்மையில் அரசு தலைவர்கள் தான் குற்றவாளியாக இருப்பது சாதாரண குடிமகனுக்கும் தெரிந்த விடயமாகும்.

இதை மறைப்பதற்கு பேரினவாதக் கொள்கைகளை அல்லது இறமையுள்ளநாடு அல்லது சனநாயக நாடு என்று கூறிக்கொண்டு தங்களையே தாங்கள் காப்பாற்றுவதற்காக உண்மைகளை மறைத்து அப்பட்டமாக செயற்பட்டு வருகின்றது. குறிப்பாக குடும்பத் தலைவரே பிள்ளைகளுக்கு நீதியை வழங்க அல்லது அவர்களின் உரிமைகளை புரிந்துகொள்ளாது நடந்து கொள்பவர்போல நாட்டின் சனாதிபதி செயல்பட்டு வருகின்றார். இவர்களே இன்று எவ்விதமான தீர்மானங்களையும் வழங்காது பாராமுகமாக இருக்கின்றனர்.

**கேள்வி:- தமிழ் மக்கள் தமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கான நீதியை சாத்தியமாக்குவதற்கு எவ்வாறான நகர்வுகளை முன்னெடுக்க வேண்டி யுள்ளது?**

பதில்:— இலங்கையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட அல்லது பாதிக்கப்பட்டவர்கள் இன்றுவரை பத்து வருடங்களைக் கடந்து பதினோராவது வருடத்தில் காலடி வைத்துள்ளனர். ஆனால் இலங்கை அரசிடம் அல்லது இலங்கை அரசியல் தலைவர்களிடம் காலில் விழுந்து கண்ணீர் சிந்தியும் இதுவரை நீதியின் கண்களை மூடி கல்மனம் கொண்டவர்களாகவும், தங்களது கதிரைகளை காப்பாற்றிக் கொள்வதற்காகவும் செயல்பட்டு வருகின்றனர்.

ஆகவே இனி இலங்கை அரசை நம்புவதால் நிச்சயமாக நீதியை பெற்றுத்தரமாட்டார்கள். எனவே அனைத்து மக்களும் அனைத்து மனித உரிமை அமைப்புக்களையும், சமூக நலன்கருதி நீதிக்காக செயல்படுகின்ற அமைப்புக்களையும் ஒன்றிணைத்து இதுவரை இந்த மண்ணில் நடைபெற்ற ஒவ்வொரு செயல்பாடுகளும் ஒரு பாரிய இன அழிப்பு என்பதை வெளிப்படுத்த வேண்டும்.

அது மட்டுமல்லாமல் ஒரு இனத்திற்கான உரிமைகளை இல்லாது ஒளிக்கின்ற அல்லது மறுக்கின்ற செயல்பாடானது ஒரு மனித குலத்திற்கு எதிரான பாரிய குற்றமாகும். இப்படிப்பட்ட விடயங்கள் சர்வதேசத்திற்கு தெரிந்தாலும் அவர்களுக்கு அழுத்தம் கொடுத்து சர்வதேச நீதிமன்றத்திற் கூடாகத்தான் நீதியை பெற்றுக் கொடுக்கக்கூடிய வழிகளை முன்னெடுக்க வேண்டும்.



# காத்திருக்கும் 'கண்டங்கள்'

## தாண்டுவாரா கோத்தா?



சனாதிபதித் தேர்தலில் பல தடைகளையும் தாண்டி கோத்தபாய ராஜபக்சவின் பெயர் சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் முன்மொழியப்பட்டிருந்தாலும், இறுதி வேளையில் வந்திருப்பது அவர் சற்றும் எதிர்பார்க்காத நெருக்கடிகள்தான். சிறீலங்கா பிரஜாவுரிமை குறித்து அவர் எதிர்கொண்ட கண்டத்தை வெள்ளிக்கிழமை நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் தாண்டிவிட்டாலும், கத்தி அவருடைய தலைக்கு மேலாகத் தொங்கிக் கொண்டுள்ள நிலைமைதான் தொடர்கின்றது. அதனால்தான் தமது சகோதரர்களில் மற்றொருவரான சமல் ராஜபக்சவையும் களத்தில் இறக்கியிருக்கின்றார் மகிந்த.

அமெரிக்க பிரஜாவுரிமையைப் பெற்றதால் வந்த இரட்டைப் பிரஜாவுரிமைதான் கோத்தாவுக்கான பிரதான தடையாக வரும் என முதலில் எதிர்பார்க்கப்பட்டது. அவரது

**பூமிகன்**

அமெரிக்கப் பிரஜாவுரிமை நீக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டபோது ராஜபக்ச தரப்பினர் பெரிதும் உற்சாகமடைந்தார்கள். பிரதான தடையைத் தாண்டிவிட்டதாக நினைத்தார்கள். ஆனால், அவருக்கு மற்றொரு தடையைப் போடுவதற்கு ஐ.தே.கட்சிக்கு ஆதரவான ஒரு பிரிவினர் திட்டமிட்டிருந்தார்கள். இதில் த.தே.கூ பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனும் சம்பந்தப்பட்டிருப்பதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் சொல்கின்றன.

அமெரிக்க பிரஜாவுரிமைக்குப் பதிலாக இலங்கைப் பிரஜாவுரிமையை கோத்தா எப்படிப் பெற்றார் என்ற பிரச்சினை இப்போது அவருக்கு எதிராகப் பாய்ந்திருக்கின்றது. மேன்முறையீட்டு நீதிமன்றம் கோத்தாவுக்கு ஆதரவாகத் தீர்ப்பளித்திருந்தாலும், திங்கட்கிழமை நியமனப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்ட பின்னரும் அவருக்கு எதிரான நெருக்கடிகள் தொடரலாம். மேன்முறையீடு செய்யப்பட்டு, கோத்தா தேர்தலில் போட்டியிட முடியாத நிலை ஏற்படுத்தப்படலாம். மாற்று வேட்பாளர் ஒருவரைத் தேட வேண்டிய நிலைக்கு ராஜபக்ச அணி தள்ளப்பட்டது.

அதனால்தான் கோத்தாவுக்கு எதிரான வழக்கு காமினி வியன்கொட, பேராசிரியர் தெனுவர ஆகியோரால்தான் தொடரப்பட்டன. அடையாள அட்டை மற்றும் கடவுச்சீட்டு சம்பந்தமான வழக்குகள்தான் கடந்த வாரம் சூறாவளியை கிளப்பியிருந்தது. புதன்கிழமை ஆரம்பமாகிய இந்த வழக்கு விசாரணை வெள்ளிக்கிழமை மாலை முடிவுக்கு வந்து, தீர்ப்பு கோத்தாவுக்குச் சார்பாக வந்திருப்பது உண்மைதான். தீர்ப்பு எவ்வாறு அமைந்தாலும் கோத்தாவின் தலைக்கு மேலாக கத்தி தொங்கிக்கொண்டிருக்கும் என்பதால், மற்றொரு மாற்று வேட்பாளரைத் தயார்படுத்தி வைத்திருக்க வேண்டிய நிர்ப்பந்தம் ராஜபக்சக்களுக்கு ஏற்பட்டது.

"கோத்தா எதிர்கொள்ளும் வழக்கு இது ஒன்று மட்டுமல்ல. அவருக்கு எதிராக பல வழக்குகள் உள்ளன. ஏனைய வழக்குகளை ஒதுக்கிவைத்து விட்டு அடையாள அட்டை மற்றும் கடவுச்சீட்டு தொடர்பான பிரச்சினையை மட்டும் எடுத்து கொண்டால், கோத்தா செய்துள்ள குற்றம் பாரதூரமானது" எனக் குறிப்பிடுகின்றார் சிரேஷ்ட பத்திரிகையாளர் விக்டர் ஐவன். "கோத்தா குடியுரிமை சட்டத்தை மீறியுள்ளார். குடிவரவு மற்றும் குடியகல்வு சட்டத்தையும் மீறியுள்ளார். போலி ஆவணங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது தெளிவாகியுள்ளது" எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

கோத்தாவின் இலங்கைப் பிரஜாவுரிமையை உறுதிப்படுத்தி மேன்முறையீட்டு நீதிமன்றம் இப்போது தீர்ப்பளித்துவிட்டாலும் கூட, அவருக்கு எதிராகத் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் பாரதூரமானவை. திங்கட்கிழமை நியமனப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்ட உடனடியாகவே கூட, அவரது நியமனப் பத்திரத்துக்கு எதிராக ஆட்சேபனை தெரிவிக்கப்படலாம். சுமார் 30 வரையிலானவர்கள் சனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக கட்டுப்பணம் செலுத்தியிருக்கின்றார்கள். இவர்களில் சிலர் கோத்தாவுக்கு எதிராக சர்ச்சையைக் கிளப்புவதற்கென்றே களமிறக்கப்பட்டவர்கள் எனச் சொல்லப்படுகின்றது.

கோத்தா 1976ஆம் ஆண்டு டிசம்பர் 21ஆம் திகதி தேசிய அடையாள அட்டையைப் பெற்றுள்ளார். அதன் இலக்கம் 491724021V, அப்போது அவர் பெற்ற கடவுச்சீட்டின் இலக்கம் என்— 5384975. அவருக்கு 2003 ஆம் ஆண்டு ஜனவரி 31ஆம் திகதி அமெரிக்க குடியுரிமை கிடைத்துள்ளது. குடியுரிமை சட்டத்தின்படி வெளிநாடு ஒன்றில் குடியுரிமை பெற்ற ஒருவரது சிறீலங்கா குடியுரிமை தானாவே இரத்தாகும். 2005ஆம் ஜனாதிபதி தேர்தல் நடந்த போது, கோத்தாபய அமெரிக்கப் பிரஜையாக தற்காலிக விசா அனுமதியை பெற்றே இலங்கை வந்தார். மகிந்த 2005 ஆம் ஆண்டு நவம்பர் 18ஆம் திகதி சனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார். கோத்தா நவம்பர் 21ஆம் திகதி இரட்டை குடியுரிமை வழங்கப்பட்டுள்ளது. சிறீலங்கா அரசாங்கத்தினால் அந்த குடியுரிமை அவருக்கு வழங்கப்பட்டது.

சனாதிபதித் தேர்தல் நடைபெற்று அமைச்சர்கள் ஒருவர் கூட நியமிக்கப்படாத நிலையில் துரித கதியில் இரட்டை குடியுரிமை வழங்கப்பட்டுள்ளது. இரட்டை குடியுரிமைக்கான விண்ணப்ப பத்திரத்தில் அவர் தன்னைக் கணனிப் பொறியியலாளர் எனக் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் அவரது புதிய சிறீலங்கா அடையாள அட்டையை (194917210010) கடந்த 2016ஆம் ஆண்டு அமெரிக்க குடியுரிமை இருக்கும் போதே பெற்றுள்ளார். சட்டத்திற்கு முரணானப் புதிய அடையாள அட்டையைப் பெற்றுக்கொண்டிருக்கும் போதே, 2017, 2018, 2019ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியலில் செல்லுப்படியற்ற அடையாள அட்டையைப் பயன்படுத்தி வாக்காளராக பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதுவும் வேண்டும் என்றே செய்த பாரதூரமான தவறாக கருத முடியும். அதேவேளை அமெரிக்க குடியுரிமை இருக்கும் போதே கோத்தா தனது சிறீலங்காகக் கடவுச் சீட்டை (N-192600594) பெற்றுள்ளார். இவை அனைத்தும் பாரதூரமான குற்றங்கள். இவை தெரிந்தே செய்த தவறுகளே அன்றி தவறுதலாக செய்தவை அல்ல. அதற்கு அமைய அவர் நடைபெறவுள்ள சனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாது. இந்த பாரதூரமான குற்றங்களுக்கு தண்டனை கிடைப்பதை தவிர்க்க முடியாது என்பதுதான் அவருக்கு எதிராகத் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள். வியாழக்கிழமை நடைபெற்ற விசாரணைகளின் போது, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சர் வஜிர அபேகுணவர்த்தன சர்பில் சனாதிபதி சட்டத்தரணி சானக டி சில்வா முன்னிலையாகி வாதிட்டார். இரட்டைப் பிரஜாவுரிமை வழங்கும் அதிகாரம் சட்டப்படி உள்நாட்டலுவல்கள் அமைச்சருக்கே உள்ளது என்று வாதங்களை முன்வைத்த அவர், அமைச்சரவை இல்லாத சமயத்தில் அந்த அமைச்சரின் அதிகாரத்தை சனாதிபதி தாமே பிரயோகிக்கலாம் என்ற வாதம் சட்ட ரீதியாகத் தவறானது என்பதை விளக்கினார். இவ்விடயத்தில் சனாதிபதிக்கு முழுமையான பிரத்தியேக அதிகாரம் இருப்பதாகக் கூறப்படுவது முற்றிலும் தவறு என்று குறுப்பிட்ட அவர், அதனை ஊர்ஜிதப்படுத்துமாற்போல உயர்நீதிமன்றம் ஏற்கனவே வழங்கிய இரண்டு வழிகாட்டல் தீர்ப்புகளையும் ஆதாரமாக முன்வைத்தார்.

வெள்ளிக்கிழமை வழங்கப்பட்ட தீர்ப்பில் கோத்தாவுக்கு எதிரான மனு தள்ளுபடி செய்யப்பட்டிருக்கின்றது. அவரது இலங்கை குடியுரிமை ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றது. இதில் அவர் தப்பிப் பிழைத்தால்கூட, உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யவும், அந்த மேன்முறையீட்டின் மூலம் வேட்புமனுத் தாக்கலுக்கும், வாக்களிப்புக்கும் இடையில், கோத்தாவின் வேட்புமனுவை இடைநிறுத்தக் கூடிய தடை உத்தரவை உயர் நீதிமன்றத்திடம் பெறவும் கூடிய வாய்ப்புகள் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதனால்தான் பதிவு செய்யப்படாத மற்றொரு கட்சியின் சார்பில் சமல் கட்டுப் பணம் செலுத்தியிருக்கிறார்.

நாளை திங்கட்கிழமை வேட்புமனுவைத் தாக்கல் செய்யும் சுமார் 30 வேட்பாளர்களில் சமல், கோத்தா சகோரர்களும் இருப்பார்கள். கோட்டவுக்கு நெருக்கடி வரவில்லை எனில் சமல் வாபஸ் பெற்றுக்கொள்வதாகவும், கோத்தாவுக்கு வாக்களிக்குமாறும் அறிவிக்கலாம். கோத்தாவுக்கு பாதகமான நிலை ஏற்பட்டால், சமலுக்கு வாக்களிக்குமாறு கோரிக்கை விடப்படலாம். சனாதிபதித் தேர்தல் இம்முறை அதிரடித் திருப்பங்கள் நிறைந்ததாகவே இருக்கப்போகின்றது. தலைக்கு மேலாக கத்தி தொங்கிக்கொண்டிருக்கும் நிலையில். தேர்தல் பிரச்சாரங்களை விறுவிறுப்பாக முன்னெடுப்பது கோத்தாவுக்கு சங்கடமானதாக இருக்கும்.

# தமிழ் மக்களின் அரசியல்: பாதையற்ற பயணமும், பணப்பெட்டிகளின் கூடாரமும்



மு.திருநாவுக்கரசு

நடைபெறவுள்ள சனாதிபதித் தேர்தல் சிங்கள மக்களுக்கு ஒரு தெளிவான முடிவைக் கொடுக்கும். அது ஒரு தெளிவான விடிவையும் கொடுக்கும். ஆனால் அது தமிழ் மக்களுக்கு குழப்பத்தையும், அழிவையும், துன்பத்தையும் கொடுக்குமே தவிர வேறு எதனையும் கொடுப்பதற்கில்லை. தேர்தலுக்கு முன்னான காலம் சிங்கள மக்கள் பக்கத்தில் பெரும் குழப்பங்கள் இருப்பதான காட்சிகள் தோன்றலாம். ஆனால் தேர்தலுக்கு பின்பு யாரோ ஒரு சிங்களத் தலைவர் நாற்காலியில் அமர்வார். அரச சக்கரம் சுழலும் . ஆனால் தமிழ் மக்களின் தலைவிதி தேர்க் காலில் அகப்பட்ட கன்றுக்குட்டியாய் நசிந்து போய்விடும். சிங்கள மக்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கென ஒரு அரசு உண்டு; அவர்களுக்கென ஆயுட்கால முழுநேர அரசியல் தலைவர்கள் உண்டு. அவர்களுக்கென வளர்ச்சியடைந்த அரச இயந்திர கட்டமைப்பு உண்டு. அந்த அரச இயந்திர கட்டமைப்புகளை இயக்கக்கூடிய தொழில்சார் அதிகாரிகளும் நிபுணர்களும் உண்டு.

ஆதலால் முழுநேர தலைவர்களாக இருந்து அரச கலையில் வளர்ச்சியடைந்த சிங்களத் தலைவர்கள் தமது துறை சார்ந்த அதிகாரிகளுடனும், துறைசார்ந்த நிபுணர்களுடனும் இணைந்து அனைவரினது கூட்டு மூளை உழைப்போடு சிங்கள பௌத்த தேசிய இனவாத ஆட்சியை பலமாக முன்னெடுத்துச் செல்வர்.

இவ்வாறு முழு நேர தலைவர்களாக இருந்து கூட்டு மூளைப் பலத்துடன் ஆட்சிக் கலையில் பயிற்சி பெற்ற சிங்கள தலைவர்களின் சுண்டு விரல் அசைவுக்குள் பகுதி நேரப் பொழுதுபோக்கு அரசியல்வாதிகளான தமிழ் தலைவர்கள் பம்பரமாய் சுழன்று போவர். இறுதியில் சிங்களத் தலைவர்களின் அரசியல் கரகாட்டத்தின் முன்பு தமிழ்த் தலைவர்கள் சிதம்பர சக்கரத்தை பேய்பார்த்த நிலையில் கதியற்று நிற்பர்.

முழுநேர அர்ப்பணிப்பும், சர்வதேச அரசியல் பற்றிய சரியான அரசியல் ஞானமும் இன்றி தமிழ் மக்களின் எதிர்காலத்திற்கான திட்டங்களை ஒருபோதும் வகுக்க முடியாது.

சர்வதேச கண்ணோட்டத்திற்கூடாகப் பார்த்தால் தற்போது நடைபெறவுள்ள தேர்தல்கள் முதலாவது அர்த்தத்தில் உலகளாவிய ரீதியில் அமெரிக்காவுக்கும், சீனாவுக்கும் இடையிலான தேர்தல்கள், பிராந்திய ரீதியில் இந்தியாவுக்கும், சீனாவுக்கும் இடையிலான தேர்தல்கள் என்பதே உண்மையாகும். தென்னாசியப் பிராந்தியம் உட்பட பரந்த இந்துமா கடல் முழுவதும் சீனா மேலாதிக்கம் செய்வதற்கு இலங்கையில் அமையக்கூடிய அரசாங்கங்கள் சீன அரசுக்கு முக்கியமானவை. 2015ஆம் ஆண்டு தேர்தலில் சீனா சற்றும் எதிர்பாராத விதமாக பெரும் தோல்வியை இலங்கையில் தழுவிக் கொண்டது. முள்ளிவாய்க்கால் யுத்தத்தின் போது ராஜபக்சக்களுக்கு அரசியல், இராணுவ, புலனாய்வு மற்றும் ராசதந்திர ரீதியில் பெரிதும் உறுதுணையாக நின்ற சீனா, அதன் அடிப்படையில் யுத்த வெற்றியின் பின்பு இலங்கையில் பெரிதும் கால்பதித்துக் கொண்டது. இந்நிலையில் சீனாவை இலங்கையிலிருந்து பின்தள்ளுவதற்காக 2015ஆம் ஆண்டு தேர்தல்களின் போது அமெரிக்காவும், இந்தியாவும் அதிகம் முன்கூட்டிய ஏற்பாடுகளுடன் செயற்பட்டு திட்டமிட்டவாறு சீனாவைப் பின் தள்ளுவதில் வெற்றிபெற்றன. தோல்வியடைந்து பெரும் காயப்பட்ட சீனா, அதிலிருந்து மீள்வதற்கு அப்போதிருந்தே செயல்படத் தொடங்கி 2019 ஆம் ஆண்டு தேர்தலை எதிர்கொள்ளும் நிலைக்கு தயாரானது. முன்கூட்டியே பயிற்சிபெற்று களமிறங்கிய ஒரு குத்துச்சண்டை வீரன் போல சீனா ஏற்கனவே தேர்தல் களத்தில் குதித்துவிட்டது.

உயிர்த்த ஞாயிறு குண்டு தாக்குதல், ஞானசார தேரர் விடுதலை, முஸ்லீம்களுக்கு எதிரான கலவரங்கள், முள்ளிவாய்க்கால் படுகொலையின்போது அடையாளம் காணப்பட்ட போர்க்குற்றவாளியான சவேந்திர சில்வாவை இராணுவ தலைமை தளபதியாக நியமித்தமை என்பனவற்றுக்குள் எல்லாம் மேற்படி தேர்தலுக்கான தயாரிப்புகள் புதைந்து கிடக்கின்றன.

மேலும் கடந்த ஆண்டின் இறுதியில் ஏற்பட்ட ஆட்சி கவிழ்ப்பும், அதன்போது பிரதமரான மஹிந்த ராஜபக்ஷவை சீனா முண்டி அடித்துக்கொண்டு பிரதமராக அங்கீகரித்த முதலாவது உலக நாடு என்ற நிலைமையும் இத்துடன் இணைத்து கவனிக்கத்தக்கது. இந்நிலையில் சர்வதேச சக்திகளுக்கு ஊடாகவும், உள்நாட்டு நிலைமைகளுக்கு ஊடாகவும் தேர்தலை நோக்கி பெரிதும் பலம் பெற்ற ஒரு சக்தியாக ராஜபக்சக்கள் காணப்படுகின்றனர்.

மேலும் இலங்கை வாழ் முஸ்லீம்களின் மொத்த சனத்தொகையில் 52 % தெற்கிலும், 48 % வடக்குக் கிழக்கிலும் வாழ்கின்றனர். உயிர்த்த ஞாயிறு குண்டு தாக்குதலின் பின் ஏற்பட்ட வன் செயல்களினால் முஸ்லீம்களின் பாதுகாப்பு பெரிதும் பீதிக்குள்ளாகியது. தெற்கில் சிங்கள மக்களுடன் பின்னிப் பிணைந்து காணப்படும் முஸ்லீம் மக்கள் அங்கு தமக்கான சமூகப் பாதுகாப்பை பெறவேண்டுமென்றால் ஆட்சிக்கு வரக்கூடிய இரண்டு பெரும்பான்மை கட்சிகளுடனும் இசைந்து செயல்பட வேண்டியிருக்கும். இந்நிலையில் அவர்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு மட்டும் வாக்களிக்காது சிங்கள மக்கள் மத்தியில் முனைப்பு பெற்றிருக்கும். சிறீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் வாக்களிக்க வேண்டிய அவசியம் உண்டு. ஆதலால் தெற்கில் வாழும் முஸ்லீம்களில் அரைப் பங்குக்கு குறையாதவர்களின் வாக்குகள் ராஜபக்சக்களைச் சென்றடைய முடியும். இறுதியாக நடந்துமுடிந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலின் போது அளிக்கப்பட்ட சுமாராக ஒரு கோடியே 25 லட்சம் வாக்குகளில் ராஜபக்ச தலைமை—யிலான சிறீலங்கா பொதுஜன பெரமுன 66,22,261 வாக்குகளைப் பெற்றுள்ளது. இது அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் அரைப்பங்கு மேலாகும். ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அணியினருக்கு 42,07,728 வாக்குகளே கிடைத்தன.

முழு இலங்கைத் தீவு தழுவிய வகையில், தனித்து சிங்கள வாக்குகளால் மட்டுமே ராஜபக்சக்கள் அறுதிப் பெரும்பான்மை பலத்தை அத்தேர்தலில் பெற்றிருந்தனர் என்பது கவனத்துக்குரியது. ரணில் — சிறிசேனா உட்பட்ட நல்லாட்சி அரசாங்கத்தினால் நாட்டுக்கு ஸ்திரமான ஆட்சியைக் கொடுக்க முடியாது என்ற அனுபவத்தை கடந்த சில ஆண்டுகளாக சிங்கள மக்கள் அனுபவித்து வருகின்றனர். மேலும் உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்பின் பின்னணியில் உறுதியான அரசாங்கத்தை நாடி ராஜபக்சக்கள் பக்கம் சிங்கள மக்களின் மனம் சாய்ந்து இருப்பது தெரிகிறது.

இத்தகைய பின்னணியில் , தோல்வியை முன்னுணர்ந்த நிலையில்தான் தனக்கு சவாலான சஜித் பிரேமதாசவை களமிறங்கி அவரைப் பலியிடுவதன் மூலம் ரணில் விக்ரமசிங்க தன்னைத் தற்காத்து உள்ளார் என்ற அபிப்பிராயம் எழுந்துள்ளதும் கவனத்துக்குரியது. இப்பின்னணியில் தமிழ் மக்களின் வாக்குகளுக்காக சஜித் பிரேமதாச தமிழ் தலைவர்களுடன் பலமான ஒப்பந்தங்கள் எதற்கும் தயாராக இருக்க மாட்டார். தமிழ் தலைவர்களுடனான ஒப்பந்தங்கள் எதுவும் சிங்கள மக்களுக்கு சீற்றத்தை

தொடர்ச்சி 08ம் பக்கம்..

# சஜித் மீது கழிவு ஒயில் வீச்சு

எதிர்வரும் சிறீலங்கா சனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஐக்கிய தேசிய முன்னணியின் சனாதிபதி வேட்பாளரான சஜித் பிரேமதாசவின் ஒளிப்படத்திற்கு கழிவு எண்ணெய் வீசப்பட்டுள்ளது.

சாய்ந்தமருது வீதியில் ஒட்டப்பட்டிருந்த குறித்த சுவரொட்டிகள் மீதே இவ்வாறு கழிவு எண்ணெய் வீசப்பட்டுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினரான சஜித் பிரேமதாசவின் ஒளிப்படம் அம்பாறை மாவட்டத்தின் கல்முனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இடங்களில் ஒட்டப்பட்டுள்ளது.

குறித்த சுவரொட்டிகள் தேர்தல் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், 'புதிய இலங்கையை நோக்கி' எனும் பெயரில் ஒட்டப்பட்டுள்ளன.



இந்த சுவரொட்டிகள் அப்பகுதி மக்கள் மத்தியில் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளன. எதிர்வரும் நவம்பர் மாதம் 16ஆம் திகதி நடைபெறவுள்ள சனாதிபதி தேர்தலை முன்னிட்டு முன்னணி வேட்பாளர்களின் ஒளிப்படங்கள் உள்ளடங்கிய சுவரொட்டிகள் பரவாலாக ஒட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

# லசந்த படுகொலையில் சாட்சிகளை மறைத்த முன்னாள் ரி.ஐ.டி அதிகாரிகளுக்கு சிக்கல்

ரி.ஐ.டியின் முன்னாள் பிரதானி பிரதிப் காவல்துறை மா அதிபர் சந்ரா வாகிஸ்ட மற்றும் அப்போது அந்த புலனாய்வுப் பிரிவின் உதவி பொலிஸ் அத்தியட்சராக இருந்த பிரசன்ன அல்விஸ் ஆகியோர் இந்த நடவடிக்கையில் தொடர்புபட்டுள்ளதாக தற்போது லசந்த விக்ரமதுங்க விவகாரத்தை விசாரணை செய்யும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கல்கிசை நீதிவான் நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளனர்.

இந்நிலையில் குறித்த இரு ரி.ஐ.டி முன்னாள் பிரதனிகள் தொடர்பிலும் விசேட விசாரணைகள் இடம்பெறுவதாகவும், ஏற்கனவே சாட்சிகளை மறைத்தமை தொடர்பில் கைதான கல்கிசை பிராந்திய



பொலிஸ் அதிகாரிகள் தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கை இவர்கள் தொடர்பிலும் எடுக்கப்படும் வாய்ப்பு உள்ளதாக சி.ஐ.டியின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# யாழ் சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கும் முதலாவது விமானம்



எயார் இந்தியா விமான நிறுவனத்தின் துணை நிறுவனமான அலையன்ஸ் எயார் நிறுவனத்தின் விமானம், வரும் 14ஆம் நாள் பலாலி விமான நிலையத்தில் முதலாவதாக தரையிறங்கவுள்ளதாக, சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை தெரிவித்துள்ளது. யாழ்ப்பாணம் அனைத்துலக விமான நிலையம் எனப் பெயரிடப்பட்டுள்ள பலாலி விமான நிலைய புனரமைப்பு பணிகள் நிறைவுக்கட்டத்தை எட்டியுள்ள நிலையில், இதன் திறப்பு விழாவின் அடையாளமாகவே, அலையன்ஸ் எயார் விமானம் தரையிறங்கவுள்ளது.

சென்னையில் இருந்து வரும் முதல் விமானம் சுற்றுலாப் பயணிகளையும், வணிகப் பிரமுகர்களையும் யாழ்ப்பாணத்துக்கு ஏற்றி வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அலையன்ஸ் எயார் நிறுவனம் தொடர்ந்து, யாழ்ப்பாணம் மற்றும் தற்போது புனரமைப்பு பணிகள் இடம்பெற்று வரும் மட்டக்களப்பு அனைத்துலக விமான நிலையங்களுக்கு சென்னையில் இருந்து சேவைகளை நடத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மட்டக்களப்புக்கான சேவைகள் விரிவாக்கப்படும் வரை சென்னை— யாழ்ப்பாணம் இடையில் சேவைகள் இடம் பெறவுள்ளன. அதேவேளை, அலையன்ஸ் விமான நிறுவனம் இதுதொடர்பான அதிகாரப்பூர்வ அறிவிப்பு எதையும் இன்னமும் வெளியிடவில்லை. அந்த நிறுவனத்தின் விமானங்கள் பறக்கும் இடங்களின் பட்டியலில் இன்னமும் யாழ்ப்பாணம் அனைத்துலக விமான நிலையம் சேர்த்துக் கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

2ம் பக்கத் தொடர்ச்சி...சனாதிபதித் தேர்தலில்

அறிவித்துவிட்டே, சனாதிபதித் தேர்தல் பந்தயத்தில் குதித்துள்ளார்.

தமிழ் மக்களின் விருப்பிற்கிணங்க, தமிழ்த் தேசிய மறுமலர்ச்சிக்காக களமிறங்குவதாக அறிவித்துள்ளார். சிவாஜிலிங்கத்தின் இந்த அதிரடி நடவடிக்கையால் சமூக ஊடகங்கள் பரபரப்பாக உள்ளது. இவ்விடயம் தொடர்பில் தற்போது ரெலோ தலைமையும் அதிர்ச்சியடைந்துள்ளதாக சில ஊடகங்கள் செய்திகள் வெளியிட்டாலும் உண்மையில் நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தில் நடந்த ரெலோவின் கட்சிக் கூட்டத்தில் இவ்விடயம் குறித்து கலந்துரையாடப்பட்டதாகவும் கட்சியின் ஒப்புதலுடனே இவ்விடயங்கள் இடம்பெற்றதாகவும் எமது மின்னிதழ் பக்கத்திற்கு தகவல் கிடைத்துள்ளது.

07ம் பக்கத் தொடர்ச்சி...
தமிழ் மக்களின் அரசியல்:

ஏற்படுத்தும் என்பதால் சிங்களத் தலைவர்கள் எவரும் உறுதியான தேர்தல் ஒப்பந்தங்களை நிச்சயம் செய்ய முன்வர மாட்டார்கள்.

தமிழ் தலைவர்கள் யாரிடமும் இந்த நெருக்கடியை எதிர்கொள்வதற்கான எந்தவிதமான ஒரு திட்டமும் கிடையாது. இதுவரை தமிழ் மக்களுக்கு தலைமை தாங்கி வரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரிடம் கடந்த பத்தாண்டுகளாக எந்த விதமான திட்டமும் இருந்ததில்லை. சிங்கள ஆட்சியாளர்களுக்கு சேவை செய்வதையும், தமது சுய நலன்களைப் பாதுகாப்பதையும் அடிப்படையாகக் கொண்ட அரசியலையே தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் தொடர்ந்து முன்னெடுத்து வருகிறார்கள்.

மாற்று அரசியல் பேசிய தலைவர்களும் பெரும் குழப்பத்துடன்தான் இருக்கிறார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மாற்றுத் தலைமை பற்றி பேசியவர்கள் இரண்டு அணிகளாக உள்ளமை, வடக்கிலும், கிழக்கிலும் அரசாங்க சார்பு கட்சிகள் மூன்று என ஈழத்தமிழ் மக்கள் ஆறு பேரும் துண்டுகளாக உடைந்து கிடக்கிறார்கள். இவர்களை ஐக்கியப்படுத்தி ஒரு தேசியத் தலைமையை கட்டியெழுப்ப வேண்டியதற்கான ஆளுகையை காட்ட வேண்டிய காலம் இது. இந்நிலையில் ஒரு புதிய சிந்தனைக்கும், புதிய பாதைக்கும், புதிய மனப்பாங்கும் தயார் இல்லை என்றால் தமிழ் மக்களுக்கு அழிவை கொடுத்தவர்கள் என்பதைத் தவிர வேறு எதுவும் மிஞ்சப் போவது இல்லை.

2ம் பக்கத் தொடர்ச்சி...நாம் பல பிரிவுகளாக

மீண்டும் கூடிக் கலந்துரையாடுவதாகத் தீர்மானிக்கப்பட்டது. தொடர்ந்து, பிரதான சனாதிபதி வேட்பாளர்களுடன் நாம் நிபந்தனைகளை முன்வைத்து பேரம் பேசுதல் என்றும், அத்தகைய நிபந்தனைகளினை அடுத்த கலந்துரையாடலில் முடிவு செய்வது என்றும், அதனடிப்படையில் பேரம்பேசலில் ஈடுபடுவது என்றும், அத்தகைய பேரம்பேசல் வெற்றியளிக்காத பட்சத்தில் அடுத்த கட்டத்தில் நாம் எத்தகைய முடிவொன்றை எடுக்க வேண்டும் என்பதை தொடர்ந்தும், கலந்துரையாடுவது என்றும், இன்றைய கலந்துரையாடலின் போது தீர்மானிக்கப்பட்டது.

2ம் பக்கத் தொடர்ச்சி... சஜித்தின் பகிரங்க

குறிப்பிட்டுள்ளார். இவ்வாறான நிலையில் ராஜபக்ச தரப்பினருக்கு எந்த அடிப்படையிலும் ஆதரவினை வழங்க முடியாத நிலையில் இருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்கள் விடுதலை முன்னணிக்கும் ஆதரவளிக்க முடியாத நிலையிலேயே இருக்கின்றது. ஆகவே சஜித் பிரேமதாஸாவே ஒரே தெரிவாக கூட்டமைப்புக்கு இருக்கின்ற நிலையில் அவரிடத்தில் பேரம்பேசுவதற்கோ, நிபந்தனைகளை விதிப்பதற்கோ கையாலாகாத நிலைமையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் அரசியல் அளுமை பலவீனப்பட்டுள்ளது. ஆரம்பத்— திலிருந்து கூட்டமைப்பின் தலைமை தமிழ் மக்களின் உரிமைகளைப் புறந்தள்ளி பிரதமர் ரணில் என்ற ஒற்றை மனிதனை மையப்படுத்திய அணுகுமுறைகளை கையாண்டமையே இந்த மோசமான நிலைமைக்கு காரணமாகியுள்ளது. ஆகவே இந்த சனாதிபதி தேர்தலிலும் கூட்டமைப்பு நிபந்தனையின்றி சஜித்துக்கு ஆதரவளிக்கும் நிலைக்கே தள்ளப்பட்டுள்ளமை தற்போது அம்பலமாகியுள்ளது. அரசியல் அவதானிகள் கருத்துரைத்துள்ளனர்.

# தமிழ் பொதுவேட்பாளரை களமிறக்கும் முயற்சியில் நடந்ததும் நடக்கப்போவதும்!

**சாதுரியன்**

சிங்கள,பேரினவாத தரப்புக்கள் தமிழ் மக்களுக்கு எள்ளளவும் விட்டுக்கொடுப்புக்களைச் செய்வதற்கு தயாரில்லாத நிலையில் அடுத்து வருகின்ற சனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் சார்பில் பொதுவேட்பாளர் நிறுத்தப்பட வேண்டும் என்றும், தமிழ்த் தரப்புக்கள் ஒன்றிணைந்து பொது நிபந்தனைகளை சனாதிபதி வேட்பாளர்களின் முன் வைத்து பேரம்பேசும்




சக்தி ஊடாக அபிலாசைகளை அடைந்து கொள்வதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்ற சிந்தனை உருவாக்கமும் வெகுவாக எழுந்திருந்தது.

இதனையடுத்துசிவில் அரசியல் சாயமற்ற வகையில் இப்பணியை முன்னெடுப்பதற்காகவும், முதற்கட்டமாக தமிழ்த் தேசிய சிந்தனைகளைக் கொண்டிருக்கும் அரசியல் தரப்புக்களை ஒருங்கிணைப்பதற்கான பணிகளை மேற்கொள்வதற்குமாக தமிழ் மக்கள் பேரவையின் ஆசீர்வாதத்துடன் சமூக, மத தலைவர்களின் பங்கேற்புடன் குழுவொன்று அமைக்கப்பட்டது.

இக்குழுவானது, கடந்த 3ஆம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சந்திருந்தது. அதனையடுத்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நீதியரசர் சி.வி.விக்கினேஸ்வரன், ஈ.பி.ஆர்.எல்.எப்.தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன், ரெலோ செயலாளர் ஸ்ரீகாந்தா, புளொட் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன் ஆகியோரை தொடர்ச்சியாக சந்தித்து கலந்துரையாடல்களை மேற்கொண்டது.

இதில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டும் என்று கூற, கஜேந்திரகுமார் தேர்தலையே புறக்கணிக்கும் நிலைப்பாடு எடுக்கவேண்டும் என்று கூற விக்கினேஸ்வரன், சுரேஸ், சித்தார்த்தன், ஸ்ரீகாந்தா யாரைக்களமிறக்குவது, அதற்கான வாய்ப்புக்கள் எவ்வளவு தூரம் சாத்தியம் உள்ளிட்ட பல்வேறு விடயங்களை தீவிரமாக ஆராய்ந்திருந்தனர். இருப்பினும் இந்த விடயத்தில் கட்சிகளிடையே கொள்கையளவிலான இணக்கபாடுகள் ஓரளவு இருந்தாலும் நடைமுறைச் சாத்தியமாகுவதில் மாறுபட்ட நிலைப்பாடுகளே காணப்பட்டன.

இந்நிலையில் இறுதி முடிவொன்றை எடுப்பதற்காக சிவில் சமூக, மதத்தலைவர்களின் குழுவிற்கு வலுச்சேர்க்கும் வகையில் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் அனைத்து தமிழ்த் தேசிய கட்சிகளின் பிரதிநிதிகளை கடந்த சனிக்கிழமை சந்தித்திருந்தனர்.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளுடன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் நாடாளுமன்றஉறுப்பினர்களான மாவை சோ.சேனாதிராசா, சி.சிறிதரன் மற்றும் வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் ஆகியோரும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி சார்பில் அதன் தேசிய அமைப்பாளரும் சட்டத்தரணியுமான வி.மணிவண்ணன் சட்டத்தரணி க.சுகாஸ் ஆகியோரும் தமிழ் மக்கள் கூட்டணியின் சார்பில் க.அருந்தவபாலனும், ஈ.பி.ஆர். எல்.எப் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனும், புளொட் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் மற்றும் எஸ்.ராகவன் ஆகியோரும் ரெலோ அமைப்பின் சார்பில் அதன் செயலாளர் நாயகமும் சட்டத் தரணியுமான என்.சிறிகாந்தா ஆகியோரும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

சனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் சகல வேட்பாளரிடமும், வேட்பாளரின் பின்னாலுள்ள நாடுகளிடமும் தமிழ் மக்கள் சார்பில் கோரிக்கைகளை முன்வைத்து உத்தரவாதம் கோரப்பட வேண்டுமென மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் இந்தச் சந்திப்பில் வலியுத்தினர்.

தேர்தலைப் பகிஷ்கரிக்கலாம் எனத் தமிழ் தேசிய மக்கள் முன்னணி தெரிவித்தது. தேர்தலைப் பகிஷ்கரிக்கக்கூடாது என தமிழரசுக்கட்சி, ரெலோ, புளொட் ஆகியன கூறியதோடு தேர்தலைப் பகிஷ்கரிப்பதால் நிகழும் ஆபத்துக்களையும் அவர்கள் இதன்போது சுட்டிக்காட்டினர்.

குறிப்பாக, நாடாளுமன்ற சிறிதரன், 2005இல் தமிழீழ விடுதலைப்புலிகள் பகிஷ்கரிப்பை அறிவித்தபோது கிளிநொச்சியில் சைக்கிளில் சென்று ஒருவர் வாக்களித்தார். ஆனால் தற்போதைய நிலையில் 50 வீதமானவர்கள் வாக்களிப்பார்கள் எனத் தெரிவித்தார்.

அப்படியானால் அனைவரும் வாக்களித்து சஜித்தை வெல்லவைக்கப் போகிறீர்களா? என மணிவண்ணன் கேள்வி எழுப்பினார். அப்படியானால் வாக்களிக்காமல் பகிஷ்கரித்து



கோத்தாவை வெல்லவைக்கப் போகிறீர்களா என நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் பதில் கேள்வியெழுப்பினார்.

அனைத்து தரப்பும் ஒற்றுமையாக பகிஷ்கரிப்பு கோரிக்கையை முன்வைத்தால் 50வீதத்திற்கும் அதிகமானவர்கள் பகிஷ்கரிப்பார்கள். அதிக சதவீதமானவர்கள் பகிஷ்கரித்தார்கள் என்பதை குறிப்பிட்டு சர்வதேசத்திற்கும் தென்னிலங்கைக்கும் செய்தியொன்றை சுட்டிக்கூறலாம் என்று பல்கலைகழக மாணவர்கள் தெரிவித்தனர்.

எவ்வாறாயினும், சனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவரைக் களமிறக்குவது நல்லயோசனை. ஆனால் அதற்குக்காலம் கடந்துவிட்டதால், அடுத்துமேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராயவேண்டுமெனத் தமிழ்க் கட்சிகளிடம் மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் வலியுறுத்தியுள்ளனர்.

இந்நிலையில் தமிழ் மக்களின் நலன் நோக்கி பொது நிலைப்பாடொன்றுக்கு வருவதற்கான இணக்க நிலை தோற்றுவிக்கப்பட்டிருப்பதாகவும், அது தொடர்பில் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினரே உத்தியோக பூர்வமான நிலைப் பாட்டை வெளியிடுவர் என்றும் சந்திப்பை முடித்துக் கொண்டு வெளியேறிய கட்சிகளின் பிரதிநிதிகள் குறிப்பிட்டனர்.

இந்த சந்திப்பு பயனுள்ளதாக அமைந்துள்ளாதாக குறிப்பிட்ட கட்சிகளின் பிரதிநிதிகள் அடுத்த சந்திப்பை எதிர்வரும் 7ஆம் திகதி திங்கட்கிழமை நடாத்துவதற்கும் இணக்கம் காணப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டனர். இந்நிலையில் தற்போது தமிழ் தரப்பில் பொதுவேட்பாளரை நியமிக்கும் யோசனை கைவிடப்பட்டுள்ளது.

எனினும், பொதுவேட்பாளர் விடயத்தில் அரசியல் கட்சிகளை ஒருங்கிணைப்பதற்காக செயற்பட்ட சிவில் சமூக, மதத் தலைவர்களின் அர்ப்பணிப்பான முயற்சிகள் என்றுமே பாராட்டப்பட வேண்டியவையாக இருக்கின்றன. இந்த முயற்சிகள் நிச்சயமாக வெற்றிபெற்றிருக்க வேண்டும்.

ஆனால், சனாதிபதி தேர்தலொன்று எப்போது வரும், அதில் தமிழர்களின் வகிபாகம் என்ன என்பது பற்றி கலந்துரையாடல்கள், உரிய திட்டமிடல்கள் ஆகக் குறைந்தது சனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்ட சொற்ப காலத்தில் முன்னெடுக்கப்பட்டிருக்க வேண்டும். துரதிஸ்டவசமாக அவ்வாறில்லாது, அவசரஅவசரமாக பொதுவேட்பாளருக்கான செயற்பாடுகளை தவிர்த்திருந்தால் இக்காரியம் கைகூடியிருக்கும்.

தற்போது வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் சுயாட்சியாக சனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதாக அறிவித்து கட்டுப்பணத்தினை செலுத்தியிருக்கின்றார். இவரை பொதுவேட்பாளராக கொண்டு தமிழ் கட்சிகளை ஒருங்கிணைக்க முடியுமா என்ற கருத்தாடல்களும் தற்போது மேலெழுந்திருக்கின்றன.

எவ்வாறாயினும், சரியான நேரத்தில் எடுக்கின்ற தவறான முடிவுகளும், தவறான நேரத்தில் எடுக்கின்ற சரியான முடிவுகளும் ஒருபோதும் விடுதலையை எதிர்பார்த்திருக்கும் தமிழினத்தினை பாதித்து விடக்கூடாது. நாளைய தினம் வேட்புமனுத்தாக்கலுக்கான இறுதித்தினமாக இருக்கையில் தமிழர்கள் சார்பில் பொதுவேட்பாளர் ஒருவரை உடனடியாக தெரிவு செய்து களமிறக்குவதானது புத்திசாதுரியமான நடவடிக்கையாக இருந்தாலும் அதன் பின்னர் ஏற்படும் பிரதிபலிப்புக்களை கவனத்தில் கொள்ள வேண்டியிருக்கின்றது.

ஆகவே தற்போதைய அரசியல் சூழமைவுகளின் பிரகாரம், பொதுவேட்பாளர் உடனடிச்சாத்தியமற்றிருப்பினும், தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து எதிர்வரும் சனாதிபதி வேட்பாளர்களிடத்தில் தனித்தனியாக பொதுநிபந்தனைகளை முன்வைத்து பேரம்பேசுவதற்கு வாய்ப்புக்களே அதிகரித்திருக்கின்றன. அந்தப்பணியில் வெற்றிபெற்று சந்தர்பத்தினை தமிழர் தரப்பு பயன்படுத்துமா?

# இராணுவத்திடம் சரணடைந்த சிறுவர்கள் எங்கே? இலண்டனில் மாபெரும் போராட்டம்!

சிறீலங்காவில் இறுதி போரின்போது இராணுவத்திடம் கையளிக்கப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சிறுவர்களுக்கானதும், போரின் போது திட்டமிடப்பட்டு பௌத்த சிங்கள பேரினவாத அரசால் கொல்லபட்ட அப்பாவி சிறுவர்களுக்கான நீதி கோரலுக்குமான கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை (06/10/2019) பிரித்தானியாவில் டவுணிங் வீதி இலக்கம் 10 இல் மதியம் 12.00 தொடக்கம் 4.00 மணி வரை நடைபெற்றது. இதில், இலண்டனில் உள்ள பல்வேறு தமிழ் அமைப்புக்களின் பிரதிநிதிகள் உட்பட பலநூற்றுக்கணக்கான உணர்வாளர்கள் பங்கேற்று தாயகத்திலே காணாமல் ஆக்கப்பட்ட குழந்தைகளின் உரிமைக்காக வான் அதிரக் குரல் எழுப்பினார்கள்.

















# ஈராக் வன்முறையில் 99 பேர் பலி-ஐ.நா கண்டனம்

ஈராக்கில் அரசுக்கு எதிரான வன்முறை போராட்டத்தில் பலியானோர் எண்ணிக்கை 100ஐ நெருங்கியுள்ளது. இந்த சம்பவத்துக்கு ஐக்கிய நாடுகள் சபை கடும் கண்டனத்தை தெரிவித்துள்ளது. ஈராக்கில் வேலையின்மை உள்ளிட்ட பொருளாதார பிரச்சனைகள் அதிகரித்து வரும் அதே வேளையில், போராட்டக்காரர்களை விரட்டியடித்தனர். அதை மீறி போராட்டக்காரர்கள் தொடர்ந்து முன்னேறியதால் காவல்துறையினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர். ஐந்தாவது நாளை எட்டியுள்ள இந்த போராட்டம் நாட்டின் பல மாகாணங்களில் பரவியுள்ள நிலையில் இருதரப்பு மோதல்களில் போராட்டக்காரர்கள் பாதுகாப்பு



அங்கு ஊழல் தலைவிரித்தாடுகிறது. இதனால் அந்நாட்டு மக்கள் அரசுக்கு எதிராக போராட்டத்தில் குதித்துள்ளனர். இதற்கிடையே, தலைநகர் பாக்தாத்தில் அரசுக்கு எதிராக நடந்த பேரணியில் பெரும் வன்முறை வெடித்தது. பாக்தாத்தில் உள்ள வரலாற்றுச் சின்னமான தரீர் சதுக்கத்தை நோக்கி பேரணியாக சென்ற ஆயிரத்துக்கும் அதிகமானவர்களை காவல்துறையினர் தடுத்து நிறுத்தினர். அப்போது காவல்துறையினருக்கும், போராட்டக்காரர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. காவல்துறையினர் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசியும், தடியடி நடத்தியும் படையினர் என 99 பேர் உயிரிழந்தனர். சுமார் 4 ஆயிரம் பேர் காயமடைந்துள்ளனர்.

இந்நிலையில், ஈராக்கில் அரசுக்கு எதிரான வன்முறை போராட்டத்தில் பலியானோர் எண்ணிக்கை 100ஐ நெருங்கியுள்ளது. இந்த சம்பவத்துக்கு ஐக்கிய நாடுகள் சபை தனது கடும் கண்டனத்தை தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக ஐ.நா வெளியிட்டுள்ள அறிக்கையில், அரசுக்கு எதிரான போராட்டத்தில் 99 பேர் பலியானது துன்பகரமானது. இது நிச்சயம் தடுத்து நிறுத்தப்பட வேண்டும் எனத் தெரிவித்துள்ளது.

# ஹொங்கொங்கில் போராட்டம் தீவிரம் காவல்துறை மீது தீ வைப்பு



ஹொங்கொங்கில் விடிய விடிய நடந்த போராட்டத்தில் காவல்துறை மீது போராட்டக்காரர்கள் தீ வைத்ததால் பரபரப்பு ஏற்பட்டது. ஹொங்கொங்கில் குற்றவியல் வழக்குகளில் சிக்குபவர்களை சீனாவுக்கு கொண்டு சென்று விசாரணை செய்யும் விதமாக கைதிகள் பரிமாற்ற சட்டத்தில் திருத்தம் கொண்டுவர ஹொங்கொங் நிர்வாகம் முடிவு செய்தது.

இந்த சட்ட திருத்தத்திற்கு கடும் எதிர்ப்பு எழுந்ததையடுத்து மசோதா கைவிடப்பட்டது. ஆனாலும், ஹொங்கொங்கின் தன்னாட்சியில் சீனா தலையிடுவதை நிறுத்துதல், சுதந்திரமாக தேர்தல், போராட்டக்காரர்களை தாக்கிய காவல்துறையினர் மீது விசாரணை மேற்கொள்ளுதல், கைது செய்யப்பட்டு சிறையில் உள்ள போராட்டக்காரர்களை நிபந்தனையின்றி உடனடியாக விடுதலை செய்தல் போன்ற கோரிக்கைகளுடன் நான்கு மாதங்களுக்கும் மேலாக போராட்டம் நடைபெற்று வருகிறது.

போராட்டக்காரர்கள் தங்கள் அடையாளங்களை காவல்துறையினர் கண்டுபிடித்துவிடக்கூடாது என்பதற்காக முகங்களில் முகமூடி அணிந்துகொண்டு போராடி வருகின்றனர். இதற்கிடையில், ஹொங்கொங்கில் முகமூடி அணிந்து போராடுவதை தடைவிதிக்கும் வகையில் அவசர சட்டதை நகர தலைமை நிர்வாகி கேரி லாம் நேற்று அமல்படுத்தினார்.

# குட்டிக்காக 5 யானைகள் அருவியில் விழுந்து உயிரிழந்த பரிதாபம்

தாய்லாந்தில் அருவியில் விழுந்த குட்டியைக் காப்பாற்ற முயன்று 6 யானைகள் அடுத்தடுத்து அருவியில் விழுந்து உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது. தெற்கு தாய்லாந்து பகுதியில் காவோ யாய் தேசியப் பூங்காவில் ஹெல்ஸ் என்ற பெயரில் கட்டாட்று நீர்வீழ்ச்சி உள்ளது. இதனை ஒட்டிய வனப்பகுதியில் இருந்து அங்கு வந்த யானைக் குடும்பம் ஒன்று உலவிக் கொண்டிருந்தது. அப்போது கூட்டத்தில் இருந்த குட்டியானை ஒன்று திடீரெனத் தவறி அருவியில் விழுந்து அடித்துச் செல்லப்பட்டது. இதனைக் கண்டு மற்ற யானைகள் அதனைக் காப்பாற்ற முயன்றன. இதில் அடுத்தடுத்து 5 யானைகள் அருவியில் இருந்து விழுந்தும், பாறைகளில் மோதியும் உயிரிழந்தன. இந்தக் கூட்டத்தில் இருந்த 2 யானைகள் மட்டும் என்ன செய்வதன்று அறியாமலும், இறந்து கிடந்த தங்கள் குடும்பத்தினரைக் கண்டும் கண்ணீர் வடித்தபடியும் நின்ற காட்சிகள் மீட்புப் பணிக்குச் சென்ற வனத் துறையினரை சோகத்தில் ஆழ்த்தியது.



# பிச்சை எடுத்து ரூபா ஆறு கோடி சேர்த்த பெண்மணி



லெபனான் நாட்டில் பெண்மணி ஒருவர் மருத்துவமனை வாசலில் பிச்சை எடுத்து தனது வங்கி கணக்கில் சுமார் ரூபா 6 கோடியே 37 லட்சம் சேர்த்துள்ள சம்பவம் ஆச்சரியத்தை ஏற்படுத்தி உள்ளது. லெபனான் நாட்டில் சீதோன் நகரில் உள்ள தனியார் மருத்துவமனையின் வாசலில் தினமும் பிச்சை எடுத்து வரும் பெண், ஹஜ் வாபா முகமது அவத். இவரை மருத்துவமனை ஊழியர்களுக்கு நன்கு தெரியும். இவர் தான் பிச்சை எடுக்கும் பணத்தை ஜே.டி.பி வங்கியில் போட்டு வந்துள்ளார்.

இந்த நிலையில் ஜே.டி.பி வங்கியின் மீது அமெரிக்கா பொருளாதார தடைகளை விதித்ததையடுத்து, அந்த வங்கி சமீபத்தில் மூடப்பட்டது. இந்த வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட வாடிக்கையாளர்களின் பணத்துக்கு அந்நாட்டு ரிசர்வ் வங்கி உறுதி அளித்தது. அவர்களுக்குரிய பணம் வழங்கப்படும் என்று ரிசர்வ் வங்கி கவர்னர் ரியாத் சலாமே கூறினார்.

அந்த வகையில், ஹஜ் வாபா முகமது அவத்துக்கு ரிசர்வ் வங்கியில் இருந்து 3.3 பில்லியன் லெபனான் பவுண்டுக்கான (இந்திய மதிப்பில் ரூபா 6 கோடியே 37 லட்சம்) 2 காசோலைகள் வழங்கப்பட்டன. இது சமூக வலைத்தளங்களில் வைரலானது. இதையடுத்து ஹஜ் வாபா முகமது அவத் கோடீசுவரி என்பது தெரிந்து, அனைவரும் ஆச்சரியம் அடைந்தனர்.

இதுபற்றி அந்த மருத்துவமனையில் பணியாற்றும் நர்ஸ் ஹனா என்பவர் கூறும்போது, “ஹஜ் வாபா முகமது அவத் பிச்சைக்காரி என்றே நினைத்திருந்தோம். கடந்த 10 வருடமாக மருத்துவமனை வாசலில்தான் பிச்சை எடுத்துக்கொண்டிருக்கிறார். அவரை இந்தப் பகுதியில் எல்லோருக்கும் தெரியும். இப்போது அவர் கோடீஸ்வரி என்ற செய்தி வெளியானது மூலம் அவர் இந்த நகரம் முழுவதும் பிரபலமாகிவிட்டார்” என கூறினார்.

# இந்தியா-பாகிஸ்தானுக்கு இடையில் அணு ஆயுத போர் ஏற்பட்டால் உயிரிழப்பு யாருக்கு அதிகம்?



இந்தியா பாகிஸ்தானுக்கு இடையே அணு ஆயுத போர் ஏற்பட்டால் யாருக்கு உயிர்பலி—பாதிப்பு அதிகம் ஏற்படும் என ஆய்வில் தகவல் வெளியாகி உள்ளது. காஷ்மீர் விவகாரம் தொடர்பாக சமீபத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையில் பேசிய பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் அணுஆயுத போர் ஏற்படும் என எச்சரித்தார். சமீப காலமாக துணைக் கண்டத்தில் அணுசக்தி சொல்லாட்சி அதிக அளவில் கையாளப்படுவதாக குற்றம் சாட்டப்படுகிறது.

இந்தியா, பாகிஸ்தானுக்கு இடையே அணு ஆயுத போர் ஏற்பட்டால் என்ன என்ன பாதிப்புகள் ஏற்படும், யாருக்கு அதிகம் பாதிப்பு ஏற்படும் என ஆய்வறிக்கை ஒன்று வெளியிடப் பட்டு உள்ளது. இந்தியாவிற்கும், பாகிஸ் தானுக்கும் இடையில் ஒரு அணு ஆயுத போர் ஏற்பட்டால் குறைந்தது 5 கோடி முதல் 12.5 கோடி மக்கள் மரணமடைவதோடு மட்டுமல்லாமல், இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையிலான அணுசக்தி பரிமாற்றம், அடுத்தடுத்த காலநிலை பாதிப்புகளால் உலகெங்கிலும் பெரும் பட்டினியைக் கட்டவிழ்த்து விடும்.

இந்த ஆய்வு அறிக்கை இந்தியா மற்றும் பாகிஸ்தானுக்கு இடையிலான அணுஆயுத போர் ஒரு பிராந்திய மற்றும் உலகளாவிய பேரழிவை ஏற்படுத்தும் என்பதற்கான சான்றுகளை முன்வைக்கிறது. உலகளாவிய வளிமண்டல பேரழிவால் உலகம் பாதிக்கப் படும் என்று ஒரு புதிய ஆய்வு தெரிவிக்கிறது, இருப்பினும் இந்திய நிபுணர்கள் அத்தகைய மோதலுக்கான வாய்ப்புகள் மிகக்குறைவே என்று தெரிவித்து உள்ளனர். சயின்ஸ் அட்வான்ஸஸ் இதழில் வெளியிடப்பட்ட ஆய்வு அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது:— 2025 ஆம் ஆண்டில் இரு நாடுகளுக்கும் இடையிலான அணு ஆயுத போர் ஏற்படும் சூழ்நிலை உள்ளது. இந்த சூழ்நிலையில், அதி நவீன உலகளாவிய காலநிலை மாதிரிகளைப் பயன்படுத்தி உருவகப்படுத்தப்பட்ட இந்தியாவும், பாகிஸ்தானும் முறையே 100 மற்றும் 150 அணு ஆயுதங்களை வைத்துள்ளன. இதை பயன்படுத்தினால் 16—36 மில்லியன் டன் சூட் (கறுப்பு கார்பன்) புகையை வெளியிடுவதால் அவை மேல் வளிமண்டலத்தில் உயர்ந்து சூரிய கதிர்வீச்சைத் தடுக்கும்.

இது பூமிக்கு வரும் சூரிய ஒளியை 20 முதல் 35 சதவீதம் வரை குறைத்து, மேற்பரப்பை இரண்டு முதல் ஐந்து டிகிரி செல்சியஸ் வரை குளிரை கொடுக்கும். கூடுதலாக, கடந்த பனி யுகத்தின் நடுப்பகுதியில் இருந்து பூமியில் காணப்படாத வகையில் வெப்பநிலை குறைந்து வருவதால், கடுமையான குறுகிய கால காலநிலை இடையூறுகள், எரியும் நகரங்களிலிருந்து வரும் புகைகளால் தூண்டப்படும். இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய இரண்டும் மக்கள்தொகை அதிகம் கொண்டவை என்பதால், இரு நாடுகளின் நகர்ப்புற மக்கள் தொகையின் அடிப்படையை கொண்டு உயிர் இழப்பு இருக்கும். நகர்ப்புற மக்களில் ஒரு சதவீதத்தின் அடிப்படையில் இருக்கும் பாகிஸ்தானின் இழப்புகள், இந்தியாவிற்கு இரண்டு மடங்கு அதிகமாக இருக்கும். பாகிஸ்தானை விட இந்தியா இரண்டு முதல் மூன்று மடங்கு அதிக உயிரிழப்புகளை சந்திக்கும். ஏனென்றால் பாகிஸ்தான் இந்தியாவை விட அதிகமான ஆயுதங்களைப் பயன்படுத்தும். ஏனெனில் இந்தியாவில் மிகப் பெரிய மக்கள் தொகை மற்றும் அதிக மக்கள் தொகை கொண்ட நகரங்கள் உள்ளன.

பாகிஸ்தானில் அணுசக்தி திறன் கொண்ட விமானங்கள் (எஃப் —16 ஏ / பி மற்றும் மிராஜ் III / M) 2100 கிலோமீற்றர் வரை உள்ளன. எட்டு வகையான நில அடிப்படையிலான பாலிஸ்டிக் ஏவுகணைகள் 2750 கிலோ மீற்றர் வரை சாத்தியமான வரம்புகளைக் கொண்டுள்ளன. மேலும் இரண்டு வகையான கப்பல் ஏவுகணைகள் உள்ளன. இந்தியா முழுவதையும் மிக நீண்ட தூர விநியோக முறைகளால் அடைய முடியும். 100,000க்கும் அதிகமான மக்களைக் கொண்ட இந்தியாவில் சுமார் 400 நகரங்கள் இருப்பதால், இந்தியாவில் உள்ள அனைத்து மிதமான மற்றும் பெரிய அளவிலான நகரங்களில் மூன்றில் ஒரு பங்கை விட பாகிஸ்தான் அதன் தற்போதைய ஆயுதக் களஞ்சியத்தையும், 2025 ஆம் ஆண்டில் மூன்றில் இரண்டு பங்கிற்கும் மேலான தாக்குதல்களையும் நடத்தக் கூடும்.

இந்தியாவின் 2018 ஆயுதக் களஞ்சியத்தில் 130 முதல் 140 அணு ஆயுதங்கள் இருப்பதாக கருதப்படுகிறது, இது 2025க்குள் 200 ஆக விரிவடையும் என கிறிஸ்டென்சன் மற்றும் நோரிஸ் என்ற நிபுணர்கள் கூறுகின்றனர். இந்தியாவில் அணு ஆயுதங்கள் சேமிக்கப் படக்கூடிய ஐந்து இடங்களை அவர்கள் பட்டியலிடுகின்றனர், ஆனால் அவற்றின் இருப்பிடங்கள் அடையாளம் காணப்படாத இடங்களிலும் இருப்பதாக அவர்கள் மதிப்பிடுகின்றனர்.

இந்தியாவில் மிராஜ் 2000 எச் மற்றும் ஜாகுவார் ஐஎஸ் / ஐபி உள்ளிட்ட அணுசக்தி திறன் கொண்ட விமானங்கள் உள்ளன. இவை 1850 கிலோ மீற்றர் வரை சென்று தாக்கும். இது நான்கு வகையான நில அடிப்படையிலான பாலிஸ்டிக் ஏவுகணைகளைக் கொண்டுள்ளது. அவை 3200 கிலோ மீற்றர் வரை பயன்படுத்தப்படும்.

இந்தியாவில் கப்பல் அடிப்படையிலான பாலிஸ்டிக் ஏவுகணை மற்றும் இரண்டு நீர்மூழ்கிக் கப்பல் சார்ந்த ஏவுகணைகள் உள்ளன . 100,000க்கும் அதிகமான மக்களை கொண்ட பாகிஸ்தானில் சுமார் 60 நகரங்கள் இருப்பதால், பாக்கிஸ்தானில் உள்ள ஒவ்வொரு மிதமான அல்லது பெரிய அளவிலான நகரத்தையும் இந்தியா இரண்டு அணு ஆயுதங்களை கொண்டு அதன் தற்போதைய ஆயுதங்களையும், நான்கு போர்க்கப்பல் களையும் பயன்படுத்தி 2025க்குள் அதன் ஆயுதங்கள் 250 ஆயுதங்களாக வளர்ந்தால் தாக்கக்கூடும்.

கற்பனை செய்யப்பட்ட சூழ்நிலையில், ஆராய்ச்சியாளர்கள் 400 முதல் 500 அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவதைக் கருத்தில் கொண்டனர். இது சுமார் ஆறு ஆண்டுகளில் இந்தியாவிற்கும், பாகிஸ்தானுக்கும் இருக்கும் அணு ஆயுதமாகும். பயன்படுத்தப் படும் அணு ஆயுதங்கள் ஹிரோஷிமா அளவிலான குண்டுகள் (15 கிலோடோன் டி.என்.டி) முதல் சில நூறு கிலோடோன் வெடிக்கும் சக்தியை கட்டவிழ்த்து விடக்கூடிய நவீன ஆயுதங்கள் வரை உள்ளன. இந்த சூழ்நிலையில் இந்தியா 100 அணு ஆயுதங்களை வைத்துள்ளது. பாகிஸ்தான் 150 ஆயுதங்களை வைத்துள்ளது. அமெரிக்க மற்றும் ரஷ்யா தற்போது உலகின் மதிப்பிடப்பட்ட 13,900 அணு ஆயுதங்களில் 93 சதவிகிதத்தைக் கொண்டுள்ளன என்று அந்த ஆய்வறிக்கை கூறுகிறது.

ரட்ஜர்ஸ் பல்கலைக்கழகத்தின் பேராசிரியரும், சயின்ஸ் அட்வான்ஸஸ் இதழில் ஆசிரியர்களில் ஒருவருமான ஆலன் ரோபோக் கூறியதாவது;—அத்தகைய சூழ்நிலை ஏற்பட்டால் மழைப்பொழிவை 3 சதவீதம் வரை குறைக்கலாம் மற்றும் தாவரங்கள் ஆற்றலை உயிர்ப்பொருளாக சேமித்து வைக்கும் வீதத்தை கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்காகக் குறைக்கலாம்.

ஓசோன் குறைவு காரணமாக குளிர்ந்த வெப்பநிலை, குறைந்த மழைப்பொழிவு, குறைந்த சூரிய ஒளி மற்றும் அதிக புற ஊதா கதிர்வீச்சு ஆகியவற்றால் பயிர்கள் பாதிக்கப்படும். இதே போன்று ஒரு கால நிலை இந்தோனேசியாவின் இன்றைய சுமத்ராவில் சுமார் 74,000 ஆண்டுகளுக்கு முன்பு டோபா வெடிப்பு போன்ற சூப்பர் எரிமலை வெடிப்புகள் ஏற்பட்டு உடனடி காலநிலை மாற்றம் ஏற்பட்டது. இது பூமியின் மிகப்பெரிய வெடிப்புகளில் ஒன்றாகும்.

கொலராடோ பல்கலைக்கழகத்தின் முதன்மை எழுத்தாளரும் பேராசிரியருமான ஓவன் பி டூன் கூறியதாவது... எரியும் நகரங்களிலிருந்து வரும் புகை வான் மண்டலத்தில் உயர்ந்து ஒரு வாரங்களுக்குள் உலக அளவில் பரவும். இதனால் பரவலான விவசாய தோல்விகள் ஏற்பட வாய்ப்புள்ளது என கூறினார்.இது குறித்து டெல்லியில் உள்ள கொள்கை ஆராய்ச்சி மையத்தின் பேராசிரியர் பாரத் கர்நாட் கூறியதாவது:—பகிர்வு கலாச்சாரம் மற்றும் சமூகங்கள் காரணமாக இது கிட்டத்தட்ட சாத்தியம் இல்லை. இரு நாடுகளும் ஒருபோதும் நிர்மூலமாக்கும் போர்களை நடத்தாது. எனவே போர் ஏற்படும் சூழ்நிலை மிகவும் குறைவாகவே உள்ளன என கூறினார்.

# புவியைக் காக்க புயலாக ஒரு பெண்



உலகமே இன்று உச்சரிக்கும் பெயர் கிரேட்டா தன்பர்க். சுவீடனை சேர்ந்த 16 வயது பள்ளி மாணவி. உலகத் தலைவர்களைப் பார்த்து, `என்ன தைரியம் உங்களுக்கு?' என்று கோபப்படுகிறார். அவர் கோபப்படுவதற்குக் காரணம் இருக்கிறது. உலகம் இன்று சந்தித்துக் கொண்டிருக்கும் தலையாய பிரச்சினை பருவநிலை மாற்றங்கள்தான். அறிவியல், தொழில் நுட்பம் என வளர்ந்தபோதிலும் இயற்கையின் இந்தச் சீற்றத்தின் முன்னால் வல்லரசுகளே மண்டியிட வேண்டியிருக்கிறது. இந்த நிலைக்கு ஆளாக்கியது அரசியல் தலைவர்களின் தவறான சூழலியல் கொள்கை என்பதே கிரேட்டாவின் குற்றச்சாட்டு.

பருவநிலை நெருக்கடிக்கு எதிராக அரசுகள் நடவடிக்கைகள் எடுக்கக் கோரி சுவீடன் நாட்டின் நாடாளுமன்றம் முன்பு வாரம்தோறும் போராட்டம் நடத்திய கிரேட்டா, தன்னைப் போன்ற மாணவர்களுக்குப் `பள்ளிக்குப் போகாதீர்கள். தங்களுக்காகவும் வருங்கால தலைமுறையினருக்காகவும் வெள்ளிக்கிழமைதோறும் வீதிக்கு வாருங்கள்' என்று அழைப்பு விடுத்தார். இதன் விளைவாக சுவீடன் மட்டுமல்ல, அமெரிக்கா, அவுஸ்ரேலியா, தென்கொரியா, இந்தியா உள்ளிட்ட நாடுகளிலும் பல மாணவர்கள் போராட்டத்தில் கலந்துகொள்ள முன்வந்துள்ளனர். செப்டம்பர் 15 அன்று 82 நாடுகளில் பருவநிலை நெருக்கடிக்கு எதிராக இளைஞர்கள், பள்ளி மாணவர்கள் கலந்துகொண்ட பிரமாண்ட பேரணி



நடைபெற்றிருக்கிறது. இதற்கு ஒற்றைப் பெண்ணாக கிரேட்டா மட்டுமே காரணம். இவரது போராட்ட முறை உலகெங்கிலும் பரவி 'எதிர்காலத்துக்கான வெள்ளிக்கிழமைகள்' எனும் இயக்கம் தோன்ற வழிவகுத்திருக்கிறது. பல பள்ளி மாணவர்கள் பருவநிலைப் போராளிகளாக மாறுவதற்குத் தூண்டுகோலாக அவர் ஏற்படுத்திய தாக்கத்தை, `கிரேட்டா தன்பர்க் விளைவு' என்று கூறுகின்றனர்.

இரண்டாண்டுகளுக்கு முன்பு சுவீடன் நாடாளுமன்றம் முன்பு ஒற்றை ஆளாக பருவநிலை நெருக்கடிக்கு எதிராக பதாகையை தாங்கிக்கொண்டு நின்றிருந்தபோது உலகம் அவரை கண்டு கொள்ளவில்லை. இன்று உலகமே அவர் பேசுவதை உற்றுக்கேட்கிறது. 2019 மார்ச் 15 அன்று, 112 நாடுகளைச் சேர்ந்த 14 இலட்சம் பள்ளி மாணவர்கள் பருவநிலை நெருக்கடியைத் தடுக்க அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி வகுப்புகளைப் புறக்கணித்து அடையாளப் போராட்டம் நடத்தினர். இதையடுத்து, பெர்லினில் பிரான்டென்போர்க் வாயிலின் அருகே கூடியிருந்த 25,000 பேருக்கு முன், `எதிர்காலம் அழிக்கப்படுவதை எதிர்ப்பதற்காகக் குழந்தைகள் தம் படிப்பையே தியாகம் செய்யவேண்டிய ஒரு வித்தியாசமான உலகில் வாழ்கிறோம்' என்று ஆழம் மிக்க உரையை ஆற்றினார் கிரேட்டா.

அதே தொனியில்தான் ஐ.நா சபையிலும் பேசினார் கிரேட்டா. சாதனை படைத்த உலகத் தலைவர்கள் ஐ.நாவில் போய் பேசுவதை கௌரவமாகவும், மரியாதையாகவும், புகழாகவும் பார்க்கும்நேரத்தில், `நான் இங்கு வந்திருக்க வேண்டியதே இல்லை. இந்நேரம் கடல் கடந்து காணப்படும் என் பள்ளியில் அமர்ந்து பாடம் படித்துக்கொண்டிருக்க வேண்டியவள் நான்' என்று ஐ.நாவில் நடந்த உலக பருவநிலை நெருக்கடி மாநாட்டில் இத்தகைய உரையை ஆற்றினார். 'உங்களது வெற்று வார்த்தைகளால் எனது கனவுகளை, எனது குழந்தைப் பருவத்தைக் களவாடி விட்டீர்கள். என்ன தைரியம் உங்களுக்கு? பொய்யான வாக்குறுதிகளைக் கொடுத்து எங்களை ஏமாற்றிவிட்டு இங்குவந்து உட்கார்ந்திருக்கிறீர்கள்?' என்று உலகத் தலைவர்களை ஐ.நாவில் வைத்து கேள்வி கேட்கிறார் கிரேட்டா. அந்தக் கோபத்தை `இயற்கை நம்மீது கோபத்தை காட்டப்போகிறது அதற்குள் விழித்துக்கொள்ளுங்கள்' என்கிற எச்சரிக்கையாகவே உலக நாடுகள் பார்க்கின்றன.

`மக்கள் துன்பப்படுகிறார்கள், செத்து மடிகிறார்கள். ஒட்டுமொத்த சூழலியலும் உருக்குலைந்துவிட்டது. ஆனால், உலகத் தலைவர்கள் பணம், பொருளாதாரம், அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சி என்று கதை பேசிக்கொண்டிருக்கிறார்கள்' என்று கிரேட்டா சொல்வதில் பல உண்மைகள் நிறைந்துள்ளன.

**கிரேட்டா தன்பர்க்**

2003இல் பிறந்த கிரேட்டா, 2019ஆம் ஆண்டுக்கான அமைதிக்கான நோபல் பரிசுக்கான பரிந்துரைப் பட்டியலில் இடம் பெற்றிருக்கிறார். இந்தப் பட்டியலில் இருப்பதைப் பெருமையாகவும், மரியாதையாகவும் எண்ணுவதாக ட்விட் செய்திருக்கிறார். 2018இல் `டைம்' இதழ் தேர்ந்தெடுத்த உலகின் மிகச்சிறந்த 25 இளைஞர்களில் ஒருவரான கிரேட்டா, அதே ஆண்டு டிசம்பரில் `டைம்' இதழின் முகப்பு அட்டையில் `அடுத்த தலைமுறை தலைவர்களில் ஒருவர்' என இடம்பிடித்தார். பிரிட்டனிலிருந்து வெளிவரும் `வோக்' இதழின் செப்டம்பர் இதழ் முகப்பு அட்டையில் `மாற்றத்துக்கான சக்திகள்' என்ற தலைப்பில் இடம்பெறும் 15 நபர்களில் ஒருவர் எனவும் அடையாளப்படுத்தப்பட்டார். இப்படி, பருவநிலை நெருக்கடிக்காகத் தொடர்ந்து குரல்கொடுப்பதன் மூலம் சர்வதேச அளவில் கவனம் ஈர்த்து வருகிறார் கிரேட்டா தன்பர்க்.

2019 ஆகஸ்ற் மாதத்தில் ஜெர்மனியில் உள்ள ஹம்பாச் காடுகளுக்குப் பயணித்த இவர், நிலக்கரிச் சுரங்கத்துக்காக மரங்கள் வெட்டப்பட்டு அந்த வனம் அழிக்கப் படுவதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று குரலெழுப்பினார். விமானங்கள் வெளிப்படுத்தும் பசுமைக் குடில் வாயு தாக்கத்தின் ஆபத்தை வெளிப்படுத்தும்விதமாக, ஏற்கெனவே சுவீடனில் 'பறப்பது அவமானம்' என்கிற அமைப்பு இயங்கிவருகிறது. அதை உலகளவில் கொண்டுசெல்லும் விதமாக ஐ.நாவில் பேசுவதற்காக ஸ்வீடனில் இருந்து படகிலேயே அமெரிக்கா வந்தடைந்தார் கிரேட்டா. இயற்கைக்காகப் போராடுவதோடு, இயற்கையோடு இயைந்து வாழ்தலின் அவசியத்தையும் உணர்த்துகிறார் இவர்.

ஐ.நாவில் எதிர்பாராதவிதமாக அமெரிக்க அதிபர் ட்ரம்பைச் சந்தித்தார் கிரேட்டா. அப்போது இவர் முகத்தில் எழுந்த கோபமான முறைப்புப் பார்வை இணையத்தில் ட்ரெண்டிங் ஆனது. கோபமும், ஆவேசமும், அழுகையுமாக கிரேட்டா ஐ.நாவில் பேசியதைப் பார்த்து `மிகவும் மகிழ்ச்சியாகக் காணப்படும் இந்தச் சிறுமி, ஒளிமயமான அற்புதமான எதிர்காலத்தை எதிர்நோக்கியுள்ளார். பார்க்க நன்றாக இருக்கிறது' என்று நக்கலாகப் பதிவிட்டார் ட்ரம்ப். இப்படிச் சிறுமியை கிண்டல்செய்த அமெரிக்க அதிபரை டுவிட்டரில் பலரும் விமர்சித்து வருகின்றனர். இதற்கு என்ன பதில் சொல்லப்போகிறார் கிரேட்டா என்று அவரது டுவிட்டர் பதிவை ட்ரம்ப் பதிவிட்ட நொடியில் இருந்து கண்கொத்திப் பாம்பாகக் கவனித்துக்கொண்டிருந்தன சர்வதேச ஊடகங்கள். ஆனால், எந்தக் கருத்தையும் பதிவிடாமல் தனது டுவிட்டர் முகப்புப் பக்கத்தின் ஸ்டேட்டஸாக ட்ரம்பின் பதிவை மாற்றி ட்ரம்புக்குப் பதிலடி கொடுத்திருக்கிறார். ஒருபக்கம், `சுவீடன் வளர்ப்பு முறை சரியில்லை. கிரேட்டாவுக்குப் பின்னால் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் இருக்கின்றன. கிரேட்டாவை உலகத் தலைவர்களுக்கு எதிராக மரியாதையின்றி பேசும்படி அவருடைய பெற்றோர் வளர்த்திருக்கிறார்கள்' என்று வசைபாடுவதும் நடைபெறுகிறது. இன்னொருபக்கம் கிரேட்டாவுக்கு இருக்கும் அஸ்பெர்கர் சின்ட்ரோமை வைத்து கேலி பேசுகின்றன அமெரிக்க ஊடகங்கள். கூடவே, `அவர் மனவளர்ச்சியற்ற குழந்தை' என்றெல்லாம் விவாதிக்கின்றனர். இதற்கும் பதிலடி கொடுத்திருக்கிறார் கிரேட்டா. `அஸ்பெர்கர் சின்ட்ரோம் எனக்கு குறைபாடு அல்ல. அதுதான் என்னை நல்ல சக்தி ஆக்கியது' என்று ஊடகத்துக்குப் பேட்டி அளித்திருக்கிறார். இக்குறைபாடு உள்ளோர் மற்றவர்களைப் புரிந்துகொள்வதிலும், மற்றவர்களுடன் பேசுவதிலும் எதிர்வினை யாற்றுவதிலும் சவாலுக்குள்ளாவர் என்றும், அதே நேரத்தில் தங்கள் செயல்களில் ஆழ்ந்த ஈடுபாட்டுடன் இருப்பர் என்றும், இது ஓர் வளர்ச்சிக்குறைபாடேயின்றி நோயல்ல என்றும் கிரேட்டாவின் தாயார் குறிப்பிட்டிருந்தார். இந்தக் குறைபாடு உள்ளவர்களால் நிறமற்றதையும், காற்றில் வெளிப்படுத்தப்படுகின்ற கண்ணுக்குப் புலனாகாத வாயுவைக்கூட கண்களால் காணும் அரிய சக்தி இவருக்குள்ளதாகவும், காபன் ரொட்சைட் சுற்றுச்சூழலை மாசடையச் செய்வதை இவர்களால் பார்க்க முடிவதாகவும், அதனால்தான் இவர் பருவநிலை மாற்றத்துக்குப் பங்களிக்கிறார் என்றும் கூறப்படுகிறது. ட்ரம்புக்கு எதிரானவர் என்ற பிம்பத்தை கிரேட்டா மீது திணிக்கவும் முயற்சிகள் நடைபெறுகின்றன. இந்த நிலையில்தான் `கிரேட்டாவுடன் சுவீடனும் இருக்கிறது' என்பதை உணர்த்தும்விதமாக சுவீடனின் மிக உயரிய Right Livelihood விருதுக்கு கிரேட்டாவைத் தேர்ந்தெடுத் திருக்கிறது அந்நாட்டு அரசு. சுவீடனில் இந்த விருதினை நோபல் பரிசுக்கு ஈடானது என்று மதிப்பிடுவது உண்டு.

`எதிர்காலத் தலைமுறையினரின் விழிகள் உலக தலைவர்கள்மீதுதான் உள்ளன. எங்களுக்குத் துரோகம் செய்ய நினைத்தால், நான் இப்போது சொல்கிறேன், நாங்கள் உங்களை மன்னிக்க மாட்டோம்' என்கிறார் கிரேட்டா. ஏன் இவ்வளவு கோபப்படுகிறார் இவர்? 'அழிவின் தொடக்கத்தில் நாம் இருக்கிறோம்' என்பதுதான் உண்மையான பதில். ஒவ்வொரு மாற்றத்துக்கும் ஏதோ ஒரு நெருக்கடி தருணம் உந்துசக்தியாக அமையும். அப்படியோர் உலக நெருக்கடி நிலையின் உந்துசக்தியாக இருக்கிறார் கிரேட்டா தன்பர்க்!